# Salve Regina




மார்ச் - ஏப்ரல் 2009

**SOCIETY OF ST. PIUS X**

மலர்: 4 இதழ்: 3 & 4

(தனிச்சுற்றுக்கு மட்டும்)

**இதோ கன்னியானவள் கற்பமாகி மகவைப் பெறுவாள்;
அது மனுவேலன் என்னும் நாமம் பெறும்.** (இசை. 7:14)



**இதோ, உமது உதரத்தில் கெற்பந்தரித்து, ஓர் குமாரனைப் பெறுவீர்;
அவருக்கு சேசு என்னும் நாமஞ் சூட்டுவீர். அவர் பெரியவராயிருப்பார்,
உன்னதமானவருடைய சுதன் என்னப்படுவார்.** (லூக். 1:31,32)

# Salve Regina


"கத்தோலிக்கப் பத்திரிகைகளை வெளியிட்டு நேரிய கருத்துள்ளவர்களுக்கு வழங்கினால் மட்டும் போதாது; அனைவராலும் அவை வாசிக்கப்படும்படியாக முடிந்தவரையில் அவற்றைப் பரப்புவதும், குறிப்பாக அவர்களிடமுள்ள நச்சுக் கலந்த தீய புத்தகங்களை, கிறீஸ்தவப் பிறர்சிநேகம் தவறாமல் அகற்றியெறிவதும் அவசியமாகும்."

– பாப்பரசர் அர்ச். 10-ம் பத்திநாதர்.


**ஆசிரியர் & வெளியீடுவோர்**

சங். வளன் D. ராஜகுமார்

**உதவி ஆசிரியர்**

திரு. P. பிரான்சீஸ் குமார்

**கட்டுரையாளர்கள்**

சங். ஜோஸப் ஃபைஃபர்
Dr. S. வின்ஸெண்ட்
Dr. E. போஸ்கோ
திரு. L.M. அந்தோணி
திரு. P.J. டேவிட்.
Dr. R. அருள் ஞானராஜ்

**வடிவமைப்பு**

T.V. ரொசாரியோ

**விநியோகம்**

திரு. P. போத்திராஜ்
திரு. R.P. இருதயராஜ்
திரு. M. இன்னோசெண்ட்
திரு. A. கிளமெண்ட்
திரு. T. வின்ஸெண்ட் ராய்ஸ்
திரு. C. சந்தானராஜ்
திரு. R. பயஸ் ஜெபசிங்
திரு. R. மிக்கேலஸ்
திரு. G. அருள் மரிய விக்டர்

**நன்கொடைகள், கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**

Rev. Fr. Valan Rajakumar
'Salve Regina'
Marcel Lefebvre Place
8A/3, Annie Nagar, Seevalaperi
Road Palayamkottai - 627002
✆: 0462 - 2586201 ; 2572389

**அச்சிடுவோர்**

மாதாவின் சூசை அச்சகம்
தூத்துக்குடி – 2


சேசுக்கிறீஸ்துநாதரில் அன்பார்ந்தவர்களே,

*கடந்த சில மாதங்களாகவே திருச்சபையில், குறிப்பாக வத்திக்கானில் பரபரப்பான நிலை நிலவி வருகிறது. அர்ச். 10-ம் பத்திநாதர் குருக்கள் சபையைச் சார்ந்த நான்கு மேற்றிராணிமார்கள் மேல் இருந்ததாகச் சொல்லப்பட்ட "திருச்சபை விலக்கம்" என்ற தண்டனை நீக்கப்பட்டதன் காரணமாக உலகெங்குமுள்ள மேற்றிராணிமார்களும், அவர்களது கூட்டமைப்புகளும் ஆச்சரியத்தையும், அதிர்ச்சியையும் தரும் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். இதைத் தொடர்ந்து பரி. பாப்பரசர் 16-ம் ஆசீர்வாதப்பர் உலக மேற்றிராணிமார்கள் அனைவருக்கும் 2007, மார்ச் 10-ம் தேதியன்று கடிதம் எழுதியுள்ளார். அதில், பாரம்பரிய கிறீஸ்தவர்களுக்காக தாம் செய்த காரியத்திற்கு "எதிர்ப்பாகிய பனிச்சரிவுகள் அவிழ்த்துவிடப்பட்டுள்ளது" என்று வருத்தத்துடன் கூறியிருக்கிறார். என்றும் இல்லாத அளவிற்கு இக்காலத்தில் பாப்பானவரும், பரி. திருச்சபையும் உலகத்தால், நவீனர்களால், பதித யூதர்களால் பழிக்கப்படுகின்றனர். சில நேரங்களில் திருச்சபையின் போதனைகள் உறுதியுடன் போதிக்கப்படுகையில், அவை ஏளனம் செய்யப்படுகின்றன, நிந்திக்கப்படுகின்றன!*

*ஆஸ்திரியா நாட்டில் திருச்சபையின் போதனைகளையும், ஒழுங்குகளையும் உத்தமமாகப் பின்பற்றி போதித்து வந்த வந். ஜெர்ஹார்டு மரியா வாக்நர்* (Gerhard Maria Wagner) *ஆண்டகை லின்ஸ்* (Linz) *மேற்றிராசனத்தின் துணை மேற்றிராணியாராக நியமிக்கப்பட்ட செயலை சகிக்கமாட்டாமல், அந்நாட்டு மேற்றிராணிமார்கள் தெரிவித்த எதிர்ப்பைத் தொடர்ந்து, அவர் அப்பதவியை ஏற்க மறுத்து, தமது நியமனத்தை திரும்பப் பெற்றுக்கொள்ளுமாறு பாப்பரசரைக் கேட்டுக்கொண்டார்!*

*சமீபத்தில் தமிழ்நாட்டில் ஒரு கன்னியர் மடத்தில் நடந்த விபத்தைத் தொடர்ந்து பாதிப்படைந்த சகோதரியின் உடல்பாகங்கள் 'தானம்' செய்யப்பட்ட நிகழ்ச்சியைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். இச்செயலை (உடல் தானம்) பெரிய தியாக செயலாகச் சித்தரித்து வெளிவந்த செய்தியையும் அறிந்திருப்பீர்கள். ஆனால் இச்செயலைப்பற்றிய திருச்சபையின் போதனை என்ன என்பதை எத்தனைபேர் அறிந்திருப்பார்கள்? :- கேள்வி - பதில் பகுதியைக் காண்க!*

*இவ்விதழில் பாலர் பக்கம் என்ற சிறுவர்களுக்குப் பயன்தரும் வகையில் தொடர் ஒன்று தொடங்கப்படுகிறது. இதில் அர்ச். கிளாரம்மாளின் வாழ்க்கைச் சரித்திரம் சித்திரத்துடன் வெளிவருகிறது. அர்ச். கிளாரம்மாள் பற்றிப் பேசும் பொழுது, 1484-ல் பாரீஸ் நகரில் தொடங்கப்பட்ட ஏழை கிளாரம்மாள் சபையின் மடம் ஒன்று தேவ அழைத்தல்கள் அரிதாகி வரும் காரணத்தால் மூடப்படுகிறது! அதனை பராமரிக்க முடியாததால் மடத்துக் கட்டடம் விற்பனைக்கு வந்துள்ளது!!*

*நேயர்களே! இன்று தேவ அழைத்தல்கள் குறைந்து வருகிறது. உண்மையான வேத அறிவும் - ஞானோபதேசமும் மறக்கப்பட்டு - மறுக்கப்பட்டு வருகிறது. இதனால் கத். விசுவாசம் தளர்ந்து அழிந்துவரும் போக்கு பெருகி வருகிறது. ஆகையால் திருச்சபையினுடையவும், பாப்பரசருடையவும் போதக அதிகாரம் மறுத்து, ஏளனம் செய்யப்பட்டு வருகிறது. திருச்சபை சுயாதீனம் பெற்று வளரும்படியாகவும், தேவ அழைத்தல்கள் பெருகி செழிக்கும்படியாகவும் மன்றாடுவோமாக. குறிப்பாக திருச்சபையின் பரிபாலகரான அர்ச். சூசையப்பரின் தப்பாத ஆதரவில் நம்பிக்கைக் கொண்டு அவரிடம் வேண்டிக்கொள்வோமாக!*

**PAX VOBIS**

**சங். வளன் D.ராஜகுமார் சுவாமி**

**அர்ச். பத்தாம் பத்திநாதர் குருக்கள் சபை, பாளையங்கோட்டை.**

# குழப்பத்திலிருக்கும் கத்தோலிக்கர்களுக்கு திறந்த மடல்

- அதிமேற்றிராணியார் மிக வந். மார்செல் லெஃபவர் ஆண்டகை -

(கடந்த 42 ஆண்டுகளாக கத்தோலிக்கத் திருச்சபையில் மாற்றங்கள் செய்யப்பட்டு வருகிறது. இதனால் சாதாரண விசுவாசிகள் செய்வதறியாமல் திகைத்துபோய் உள்ளனர். அவர்களுக்கு வழிகாட்டும் விடிவெள்ளியாக அதிமேற்றிராணியார் மிக. வந். மார்செல் லெஃபவர் ஆண்டகை திகழ்கிறார். அவர் எழுதிய குழப்பத்திலிருக்கும் கத்தோலிக்கர்களுக்கு ஓர் திறந்த மடல் என்ற நூலின் தமிழாக்கம் இங்கே தரப்படுகிறது. இது நிச்சயமாக குழம்பிப் போயிருக்கும் கத். மக்களின் மனங்களில் எழும் சந்தேகங்களுக்குப் பதிலாக அமையும் என்பதில் ஐயமில்லை. – ஆசிரியர்)

## (9) புதிய குருக்கள்

*இன்று விசுவாசமற்ற, வேத காரியங்களில் அக்கறையில்லாத மனிதனுக்குக்கூட குருக்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்து வருகிறது என்பது தெரியும். எப்படியெனில் எல்லா செய்திதாள்களும் இதனை அவனுக்கு ஞாபகமூட்டி வருகின்றன. 15 ஆண்டுகளுக்கு முன்பே இதுபற்றிய ஒரு புத்தகம் "நாளை குருக்கள் இல்லாத திருச்சபை!" என்ற தலைப்பில் வெளியிடப்பட்டது.*

*திருச்சபையின் இன்றைய நிலை, வெளிப்பார்வைக்குக் காணப்படுவதைவிட மிக மோசமானதாகவே உள்ளது. இந்த விஷயத்தில் நமது மனதில் எழும் கேள்விகள் பல உள்ளது. "எத்தனைக் குருக்கள் இன்னமும் விசுவாசமுள்ளவர்களாக இருக்கிறார்கள்?" அதோடு அண்மைக் காலங்களில் குருப்பட்டம் பெற்றவர்களைப்பற்றிக் கேட்போமேயானால் "அவர்கள் உண்மையிலேயே குருக்கள்தானா? அவர்களுக்கு அளிக்கப்பட்ட குருப்பட்டம் செல்லத்தக்கதா?" என்பன போன்ற சந்தேகங்கள் இன்று நமது மனதில் எழுகின்றன. அதே சந்தேகம் மற்ற தேவதிரவிய அநுமானங்களின் விஷயத்திலும் நிலவுகிறது. எப்படியெனில் 1980-ம் ஆண்டில் கோடை காலத்தில் புருசெல்ஸ் நகரில் மேற்றிராணியார் அபிஷேக சடங்கு நடந்தது. அந்த அபிஷேக சடங்கில் அபிஷேகம் கொடுக்கும் மேற்றிராணியார் ஆயர் பட்டம் பெற இருப்பவரிடம் இப்படிச் சொன்னார்: "...நீர் காந்தியைப் போல, ஷெல்டர் காமாராவைப் போல, முகமதுவைப் போல ஒரு அப்போஸ்தலனாக இருப்பீராக...?"! இங்கு மேற்றிராணியார் கிறீஸ்துவின் பிரதிநிதியாக, அப்போஸ்தலராக, ஆன்மாக்களை மோட்ச பாதையில் நடத்திச்செல்லும் திருச்சபையின் கருத்து மாறி, ஒரு காந்தியைப் போல முகமதுவைப் போல இருக்கும் கருத்து வந்துள்ளது. இப்படி கத். திருச்சபையின் மேற்றிராணியாரை அபிஷேகம் செய்யும் கருத்து இல்லாத அந்த அபிஷேகச் சடங்கு செல்லுமா?*

*சில வருடங்களுக்கு முன்பு பிரான்ஸ் நாட்டில் தூலூஸ் நகரில் ஒரு குருப்பட்டச் சடங்கு நடைபெற்றது. குருப்பட்ட சடங்கில், நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்குபவர் குருப்பட்டம் பெற இருப்பவரை அறிமுகம் செய்துவைக்கும் போது அவரது பெயர் சொல்லி அழைத்து, "இவர் கடவுளுக்கும், மனிதருக்குமான தன் சுய அர்ப்பணத்தை முழுமையாக திருச்சபையின் சேவைக்கும் உழைக்கும் வர்க்கத்தினரோடு வாழத் தீர்மானித்துள்ளார்" என்று கூறினார். மேலும் தொடர்ந்து, "இவர் தன்னுடையப் பாதையை அதாவது, தனது குருமடப் பயிற்சியை ஒரு குழுவினரோடு முடித்துள்ளார். இவரது விண்ணப்பத்தை இனங்கண்டு, அங்கீகரித்து, இவரை குருவாக்க வேண்டும் என்று தாங்கள் வேண்டிக்கொள்வதாக அந்தக் குழுவே இவரை ஆயருக்கு பரிந்துரைக்கிறது" என்று விளக்கினார். பின்னர் சடங்கின் போது ஆயர் குருத்துவம் என்பது பற்றிய சில கேள்விகளைக் கேட்டார். நீர் குருவாக ஆசைப்படுகிறீரா? விசுவசிப்பவரோடு இருக்கவும், நீதியைத் தேடும் மனுக்குலத்தின் முயற்சியில் நீர் ஒரு அடையாளமாவும், சாட்சியாக இருக்கவும் சமாதான சகோதரத்துவத்திற்கும், கடவுளின் மக்களுக்குச் சேவை செய்யவும், மனிதர்களின் வாழ்க்கையில் அவர்கள் வாழும் முறைகளில் அவர்களுடைய கலாச்சார அமைப்பில் அவர்களுக்கு இருக்கும் வாய்ப்புகளில் கடவுளுடைய செயலைக் காணவும், கிறீஸ்துவின் செயலைச் செய்து இந்த வழிபாட்டை நடத்தவும், நற்செய்தியின் பணியில் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்பை என்னுடனும் ஆயர் சங்கத்துடனும் பகிர்ந்துகொள்ள விரும்புகிறீரா?" என்பது போன்ற கேள்விகளைக் கேட்டார் ஆயர்.*

*இந்த (குருத்துவமாகிய) தேவதிரவிய அநுமானம் நிறைவேறுவதற்கு தேவையான பொருள்* (Matter) *பட்டம் கொடுக்கும் ஆயர் பெறுபவரின் தலை மீது கைகளை வைப்பதாகும். அதன் வடிவம்* (Form) *குருப்பட்ட "வார்த்தைகள்". இவைகள் அச்சடங்கில் காணப்பட்டாலும், முக்கியமான கருத்து* (Intention)*திருச்சபையின் கருத்தோடு ஒத்திருத்தல் ஆகும். ஆனால் இது இந்த நவீனக் குருப்பட்ட சடங்கில் முற்றும் குழப்பமாகி தெளிவற்று இருக்கிறது. குருவானவர் சமுதாயத்தில் ஒரு பிரிவினர்களுக்கு மாத்திரம் சேவை செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டாரா? நியாயத்தையும், அயலாரோடு இணக்கத்தையும், சமாதானத்தையும் உலக ரீதியாக நிலைநிறுத்துவதையே தலையான நோக்கமாகக் கொண்டு குரு உருவாக்கப்பட்டுள்ளாரா? அல்லவே. அதோடு "முதல் பூசையும்" இதே ரீதியில் இருந்தது. பூசையில் காணிக்கை மன்றாட்டில் ஆண்டவரே நான் உம்மை வரவேற்கிறேன். நீர் அளித்த அப்பத்தையும் இரசத்தையும் உமது சார்பில் நான் வாங்கி, இதனால் அதிக நியாயமான, மனித மாண்புள்ள வாழ்க்கைத் தரம் உயர்த்த உருவாக்கப்பட்ட எங்கள் உழைப்பையும்*

முயற்சியையும் உமக்கு கொடுக்கிறோம்; இப்படியாகப் போகிறது அப்ப இரசம் ஒப்புக்கொடுக்கும் ஜெபம். காணிக்கைகளின் மீதான ஜெபமோ இதைவிட மிகவும் மோசமாக இருக்கிறது. எப்படியெனில், "ஆண்டவரே, இதோ இந்த அப்ப இரசத்தை நாங்கள் ஒப்புக்கொடுக்கிறோம். அவை எங்களுக்கு தேவரீர் இருக்கும் விதங்களில் ஒன்றாக மாறுவதாக..." என்ன இது? இது பூசையா? இல்லை! இப்படி பூசை செய்கிறவர்கள் திவ்விய நற்கருணை ஆண்டவரின் உண்மைப் பிரசன்னத்தை விசுவசிப்பதில்லை! எப்படி இந்த பூசை செல்லும்?

(தொடரும்)

# பாடுபட்ட சுருபத்திற்கு முன்பாகச் சொல்லத்தக்க பரிபூரண பலனுள்ள ஜெபம்




**மகா மதுரம் பொருந்திய நல்ல சேசுவே, அடியேன் தேவரீருடைய திருச்சமுகத்தில் முழந்தாளிலிருந்து, சாஷ்டாங்கமாக விழுந்து என் கைகளையும், கால்களையும் துளைத்தார்கள், என் எலும்புகளையெல்லாம் எண்ணினார்கள் என்று தேவரீரைப் பற்றி முன்னர் தாவீதென்கிற தீர்க்கதரிசி உமது வாயின் வாக்கியமாக வசனித்ததை என் கண்முன்பாகக் கண்டு, தேவரீருடைய ஐந்து திருக்காயங்களையும் மிகுந்த மன உருக்கத்தோடும் துக்கத்தோடும் என் உள்ளத்தில் விசாரித்து நினைவில் தியானிக்கிற இந்நேரத்தில், திடனான விசுவாசம், நம்பிக்கை, தேவசினேகம் என்கிற சுகிர்த கருத்துக்களையும், என் அக்கிரமங்களின்மேல் மெய்யான மனஸ்தாபத்தையும், அவைகளைத் திருத்த மெத்த உறுதியான பிரதிக்கினையையும் என் இருதயத்தில் பதியச் செய்தருள வேண்டுமென்று என் நல்ல சேசுவே, தேவரீரை என் ஆத்துமத்தின் மேலான ஆசை ஆவலோடு இரந்து மன்றாடிப் பிரார்த்திக்கிறேன். ஆமென்.**

மேற்கண்ட ஜெபத்தை திவ்விய நன்மை வாங்கியவுடன் பாடுபட்ட சுரூபத்தைப் பார்த்து பக்தியோடு சொல்லும் ஒவ்வொரு கிறீஸ்தவ விசுவாசியும் தபசுகால வெள்ளிக்கிழமைகளில் ஒரு பரிபூரணப்பலனும், மற்ற நாட்களில் அவ்வாறே சொல்லும்போது பாதி பரிபூரணப்பலனை அடையலாம்.

**பரிபூரணபலனை அடைய நிபந்தனைகள்:**

1. திவ்விய நன்மை வாங்கியிருக்க வேண்டும். (பலனை அடைய விரும்பும் நாளில் நன்மை வாங்கியிருக்க வேண்டும்).
2. பாவசங்கீர்த்தனம் செய்யவேண்டும். (ஒரு வாரத்திற்கு முன்போ அல்லது பின்போ பாவசங்கீர்த்தனம் செய்திருக்கலாம்)
3. அர்ச். பாப்பானவரின் சுகிர்த கருத்துகளுக்காக ஜெபிக்க வேண்டும். (பொதுவாக ஒரு பர. ஒரு அருள்நிறை. மந்திரம்).
4. பாவத்தின் மீது (அற்ப பாவத்தின்மீதுகூட) பற்றற்று இருக்கவேண்டும்.

ஞானப்பலன்கள் நமது பாவங்களுக்கான அநித்திய தண்டனைகளைப் போக்குகிறது. எப்படியென்றால், மேற்கண்ட நிபந்தனைகளை தகுதியான முறையில் நிறைவேற்றுபவர் கிறீஸ்துவினுடையவும், அர்ச்சியசிஷ்டவர்களுடையவும் பேறுபலன்களின் கருவூலத்திலிருந்து அதிகாரப்பூர்வமாக எடுத்து வழங்கும், திருச்சபையினுடைய வல்லமையான உதவியை பெற்று தங்கள் பாவங்களுக்கான அநித்திய தண்டனையிலிருந்து விடுபடுவார்கள்.

1. ஒரு பாவசங்கீர்த்தனத்தின் அடிப்படையில் அநேக பரிபூரணபலன்களை அடைந்துகொள்ள முடியும். ஆனால் ஒரு திவ்விய நன்மை வாங்குதல், பாப்பானவரின் கருத்துக்காக ஜெபித்தல் இவைகளின் அடிப்படையில் ஒரு பரிபூரணபலனை மட்டுமே அடையலாம்.

2. மூன்று நிபந்தனைகள் சில நாட்கள் முன்போ அல்லது பின்போ நிறைவேற்றப்பட்டிருக்கலாம். ஆனால், திவ்விய நன்மையும் பாப்புவின் கருத்துக்களுக்காக ஜெபமும் அந்த நாளில் நிறைவேறியிருக்க வேண்டும்.

3. குறிக்கப்பட்ட நிபந்தனைகளில் ஏதேனும் நிறைவேற்றத் தவறினால் பகுதிபலன் (Partial Indulgence) மட்டுமே அடையமுடியும்.

மேலும் பரிபூரணப்பலனை அடைய மேற்கூறப்பட்ட ஜெபம் பாடுபட்ட சுரூபத்திற்கு முன்பாகத்தான் சொல்ல வேண்டும். நவீன ஆலயங்களில் பாடுபட்ட சுரூபத்திற்கு பதிலாக, உயிர்த்த ஆண்டவரின் சுரூபத்தோடுகூடிய சிலுவை இருந்தாலோ அல்லது வெறும் சிலுவை மட்டுமே இருந்தாலோ சொல்லாமல், பாடுபட்ட சிலுவையைச் சித்தரிக்கும் படம் இருந்தால அதற்கு முன்பாகச் சொல்லலாம்.

# தேவ அன்னைக்கு ஓர் புகழ்மாலை!

(தேவமாதாவின் புகழ்பாடும் மாதா பிரார்த்தனையின் விளக்கம் இங்கே விவரிக்கப்படுகிறது)

## (16) சக்தியுடையவளாயிருக்கிற கன்னிகையே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

### மகனின் வல்லமையில் தாய்க்கும் பங்கு!

நமது இரட்சகரான சேசுக்கிறீஸ்துவிடம் தேவ சுபாவம், மனித சுபாவம் ஆகிய இரு சுபாவங்கள் உண்டு. தேவன் என்கிற முறையில் பிதாவாகிய சர்வேசுரனுக்கு இருப்பது போன்று அவருக்கும் சர்வ வல்லமையுண்டு. மனிதன் என்ற முறையிலும் தேவ சுபாவத்துடன் ஒன்றித்திருந்ததால் அவரது வல்லமையும், சக்தியும் அளவற்றதே. அவர் உயிர்த்தெழுந்தபின் இவ்வல்லமை முழுவதும் உலகிற்கு வெளிப்படுத்தப்பட்டது. அதனால்தான் ஆண்டவர் பரலோகத்திலும் பூலோகத்திலும் தமக்கு சர்வ அதிகாரம் கொடுக்கப்பட்டிருப்பதாகக் கூறினார். (மத்.28:18).



நமதாண்டவரின் இப்படிப்பட்ட வல்லமையில் அவருடைய தாய்க்கும் பங்கு உண்டெனில் அது பொய்யாகாது. அவருடைய பாடுகளிலும், சிலுவைகளிலும், ஏன் அவரது அனைத்து மீட்புத்திட்டத்திலும் பங்கு பெற்ற 'இணை இரட்சகியான' மாமரியும் அவருடைய மகிமையிலும், சக்தியிலும் வல்லமை பெறுவது நியாயம் தானே?

ஆம்! உண்மையிலே மகா பரி. கன்னிமரியம்மாள் இவ்வித சக்தியையும் வல்லமையையும் பெற்றிருக்கிறார்கள் என்பதற்கு திருச்சபையின் வரலாற்றில் நடந்த எண்ணற்ற அதிசய சம்பவங்களே சான்று! மாதாவின் வல்லமை அவர்களின் இவ்வுலக ஜீவியத்திலேயே வெளிப்படுத்தப்பட்டதை நாமறிவோம். கானாவூர் கலியாணத்தில் தண்ணீரை திராட்ச இரமாக்கிய நமதாண்டவரின் முதல் புதுமையே தேவமாதாவின் வல்லமையுள்ள மன்றாட்டினால் தானே நடந்தது?!

அவர்களது வல்லமை அவர்களது மோட்ச ஆரோபணத்திற்குப் பிறகு சுடர்விட்டு பிரகாசிக்கின்றது! அவர்களது வல்லமையுள்ள மன்றாட்டினால் கிறீஸ்தவ அரசர்கள் அடைந்த வெற்றிகள் தான் எத்தனை? மாதாவின் உதவியால் வேத விரோதிகள் மீதும் பதிதர்கள் மீதும் கிறீஸ்தவர்கள் பெற்ற ஜெயம் தான் எத்தனை? கடற் பிரயாணத்தில் ஏற்பட்ட ஆபத்தில் காக்கும் அவர்களது வல்லமைதான் எத்துனை சிறப்பானது! நரகக் கூளியின் மீது மாதா கொண்டுள்ள வல்லமையை எப்படி உரைப்பது? அதன் தலையை நசுக்க பரம தேவனால் நியமனம் செய்யப்பட்டவர்கள் அவர்கள் தானன்றோ?

### பதிதங்களை அழிக்கும் சக்தி!

சத்திய வேதத்திற்கு எதிராகக் கிளம்பிய தப்பறைகளையும், பதிதங்களையும் நிர்மூலமாக்கி சத்தியத்தைக் காக்கும் வல்லமை மாதாவுக்கு உண்டு. திருச்சபையின் வரலாற்றில் தோன்றின பதிதங்களான ஆல்பி ஜென்ஸியப் பதிதம், கத்தாரிச பதிதம், மானிக்கேயல் பதிதம், நெஸ்டோரியுஸ் பதிதம், புராட்டஸ்டாண்ட் பதிதம், கால்வீனிசம், ஆங்கிலிக்கன், நவீன பெந்தேகோஸ்த் போன்ற எண்ணற்ற தப்பறைகளை அவ்வப்போது அழித்தவர்களும் மாதாவே என்பது திருச்சபை வரலாற்றிலிருந்து அறியலாம். அவர்களது வல்லமையுள்ள ஜெபமாலை, உத்தரியம், அற்புதச் சுரூபம் போன்ற அருட்கருவிகள் தேவ வரப்பிரசாதங்களையும், மன்னிப்பையும் பெற்றுத் தந்து ஆன்மாக்களைக் காக்கும் மாதாவின் சக்தியை பறைசாற்றுபவையாக இருப்பதை கிறீஸ்தவர்களாகிய நாம் அறிவோம் தானே?

பிதாவின் பிரிய குமாரத்தியும், சுதனின் பரிசுத்த தாயும், இஸ்பிரீத்துசாந்துவின் நேசப் பத்தினியுமாயிருக்கிற மரியாயிக்கு அன்றி வேறு யாருக்கு தேவன் அதிக வல்லமையை அருளக்கூடும்? உண்மையாகவே மாதா தமது "மாக்னிஃபிக்காத்தில்" பாடுவது போல் "சர்வ வல்லபர் அரும்பெரும் காரியங்களை" அவர்களுக்குச் செய்துள்ளார். இவ்வளவு சக்தி வாய்ந்த நமது மோட் அன்னையை நமது சகல துன்பங்களிலும் கஷ்டங்களிலும் அண்டிப் போவோமாக. அதிலும் நமது அதிமுக்கிய அலுவலான ஆத்தும இரட்சணியத்தில் நமக்கு உதவிபுரியுமாறு அவர்களை நம்பிக்கையுடன் வேண்டுவோம். சக்தியுடைத்தான கன்னிகையே என்று வாழ்த்தி அவர்களது சகாயத்தைக் கேட்டுப் பெறுவோமாக.

**சக்தியுடையவளாயிருக்கிற கன்னிகையே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்!**

# 'Sanguis Martyrum Semen Christianorum'

## (வேதசாட்சிகளின் இரத்தம் கிறீஸ்துவர்களை விளைவிக்கும் வித்து!)

# கத்தோலிக்க விசுவாசத்திற்காக உயிர்நீத்தவர்களின் வரலாறு

(இங்கிலாந்து நாட்டில் ஆங்கிலிக்கன் புராட்டஸ்டாண்ட் பிரிவினையின் போது சத்திய கத். விசுவாசத்தில் உறுதியாக இருந்து பதிதத்தை மறுத்து தங்களுடைய இன்னுயிரை நீத்தவர்களின் வரலாறு இங்கே வெளியிடப்படுகிறது.)

## (6) அர்ச். ஹென்றி வால்போல் (St. Henry Walpole. S.J.)

**தேவ அழைத்தல்** (தொடர்ச்சி)

எவ்வளவுதான் சித்திரவதை செய்தாலும் சங். ஹென்றி வால்போல் சுவாமியிடமிருந்து எந்தவிதமான தகவல்களையும் பெறமுடியவில்லை. இதனால் 1594 பிப்ரவரி 24-ம் நாள் லண்டன் டவர் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டார். அங்கு சால்ட் டவர் (Salt Tower) என்ற கட்டிடத்தில் முதல் தள அறையில் இரண்டு மாதங்கள் தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டார். அங்கே போதிய உணவும், மூட துணியும் வழங்கப்படாது துன்புறுத்தப்பட்டார். ஆனாலும் எப்போதும் தேவ சித்தத்தையுடையவராகவே இருந்து அனைத்தையும் இங்கிலாந்து மனந்திரும்ப ஒப்புக்கொடுத்தார்.

தமது கட்டளை ஜெபத்திலுள்ள சங்கீதங்களை வாய்விட்டு பாடிக்கொண்டும், தமது மன ஓட்டங்களை அங்குள்ள மரச்சட்டங்கள், கதவுகளில், கையில் கிடைத்த கற்களால் கீறி, வரைந்து வெளிப்படுத்திக்கொண்டும் வந்தார். அவைகளில் தனது பெயரையும், சேசு சபையின் சின்னமான "IHS" என்ற ஆண்டவரின் திருநாமத்தையும், "மரியே" என்ற வார்த்தைகளையும், கிறீஸ்துவின் காயங்களோடான கைகள், பாதங்கள் ஊடுருவப்பட்ட கிறீஸ்துவின் இருதயம் போன்றவற்றை செதுக்கினார். அவை அவரது விசுவாசத்தின் வெளிப்பாடாகத் திகழ்ந்தன. அவற்றில் மனநிறைவு கொண்டார். (அவர் செதுக்கிய இந்த எழுத்துக்களையும், படங்களையும் இன்னமும் அங்கே லண்டன் டவர் சிறையின் சால்ட் டவர் சிறைகூடத்தின் முதல் தளத்தில் அவர் தங்கியிருந்த அறையில் காணலாம்.)



(அர்ச். ஹென்றி வால்போல் சிறைச் சுவரில் செதுக்கிய எழுத்துக்கள்)

மே 3-ம் தேதி மீண்டும் விசாரணை தொடங்கியது. வேதம் போதிக்க இங்கிலாந்திற்கு வந்த குருக்கள், அவர்கள் பெயர்கள் - அவருக்கு உதவும் கத்தோலிக்க மக்கள் யார்,யார் என்றெல்லாம் கேட்டு விசாரித்தனர். அனைத்திற்கும் பதில் தர மறுத்த சுவாமி மேலும் சித்திரவதைக்கு உள்ளானார். இடுப்பில் முரட்டுக் கயிற்றால் கட்டி தலைகீழாகத் தொங்கவிடப்பட்டார்.

சங். வால்போல் சுவாமி அனுபவித்த கொடூர சித்திரவதைகளைப் பற்றி இங்கிலாந்தின் சேசு சபை அதிபரான சங். ஹென்றி கார்நெட் சுவாமி 1595 அக்டோபர் 23-ல் எழுதிய கடிதத்தில்: "முத். வால்போல் சுவாமி லண்டன் சிறைச்சாலையில் கொடிய துன்பத்தையும் வறுமையையும் அனுபவித்தார். படுக்க படுக்கையில்லாமல், உடுத்த உடை இல்லாமல் கடுங்குளிரில் விடப்பட்டார். அவர் மீது இரக்கப்பட்ட சிறை காவலாளிதான், சிறிது வைக்கோல்களைக் கொடுத்துப் படுத்துக்கொள்ள உதவினான். பொது விசாரணையின் போது தந்தையவர்கள், தான் 14 தடவைகள் கொடூரமாய் வாதிக்கப்பட்டதாகவும், 6 தடவைகள் தலைகீழாக கட்டித் தொங்கவிடப்பட்டதாகவும், கூரிய இரும்பு கொக்கிகளால் இரத்தம் வர தசை கிழிய அடிக்கப்பட்டதாகவும் கூறினார்..." என்று குறிப்பிட்டுள்ளார். (Yepes, *Hist. Partic., p.685*). பின்னர் யார்க் (York) நகருக்கு விசாரிக்கக் கொண்டு செல்லப்பட்டார். சிறிதும் தூங்கவிடாது உபாதிக்கப்பட்டார். அங்கே நீதிபதிகளுக்காக பலநாட்கள் காத்திருக்கவேண்டியிருந்ததால் அங்குள்ள சிறையில் அடைக்கப்பட்டார். அரசி எலிசபெத்தை கொலை செய்ய முயன்றார் என்ற பழி சுமத்தப்பட்டது. இதனை கடுமையாக மறுத்த சங். வால்போல் சுவாமிக்கு மரண தண்டனை விதிக்க பிரபுக்கள் சபை முடிவெடுத்தது. 3 நீதிபதிகள் முன்பு விசாரிக்கப்படும் போது தன்னிலை விளக்கம் கொடுத்தார்.

"எனது அன்புக்குரிய பிரபுக்களே, நான் மூன்று காரியங்களுக்காக குற்றம் சாட்டப்பட்டதாக அறிகிறேன். 1-வது, நான் ரோமை பரிசுத்த ஸ்தானத்தின் (Holy see) அதிகாரத்தால் பட்டம் பெற்ற குருவானவர். 2-வது, நான் சேசு சபையினன். 3-வது, குருவானவரும், சேசு சபையின ரான எனது அழைத்தலின் ஊழியமான ஆன்மாக்களை சர்வேசுரனுக்கு பெற்றுத் தருவதற்காக எனது நாட்டிற்கு வந்தது. இந்த மூன்றில் எதுவும் தேசத் துரோகமான காரியங்கள் அல்ல. குருக்கள் கிறீஸ்துவின் அழைத்தலின்படி உலகிற்கு போதித்து மக்களை மனந்திருப்ப அழைக்கப் பட்டவர்கள். இங்கிலாந்து தேசத்திற்கு முதன் முதலில் சுவிசேஷ ஒளியைக் கொண்டுவந்தவர்களும் குருக்களே. ஆகையால் குருக்கள் ஒரு துரோகியாக இருக்க முடியாது" என்று வாதிட்டார்.

அப்போது நீதிபதி Ewenn என்பவர், "அப்படி யானால் மத விஷயத்தில் அரசியின் சட்டத்திற்கு கீழ்படிந்து, அரசியே திருச்சபையின் தலைவர், பாப்பு அல்ல என்பதை ஏற்றுக்கொள்கிறாயா?" என்று கேட்டார். அதற்கு சங். வால்போல் சுவாமி மறுமொழியாக, தாம் வெளிநாட்டில் சில காலம் தங்கியிருந்ததால் இங்கிலாந்தில் என்ன சட்டத் தைக் கொண்டு வந்துள்ளனர்என்பதை அறியவில்லை. ஆகையால் அதற்கு எப்படி கீழ்ப்படிய வேண்டும் என்ற கேள்வி எழவில்லை என்று கூறியவர், ஆனால் எந்த ஒரு சட்டமும் சர்வேசுரனுடைய சட்டத்திற்கு ஏற்புடையதாக இல்லாதே போனால் அது உடன்பாடற்றதுதான். உலக அரசர்களுக்கு எப்போதும் கீழ்ப்படிவது, பரலோக பூலோக உன்னத அரசரான சர்வேசுரனுக்கு நாம் கீழ்ப்படியும் கடமையைவிட மேலான தல்ல. சர்வேசுரனுக்கு கீழ்ப்படி வதே மேலானது" என்று பதிலளித்தார்.

பின்னர் தொடர்ந்து, "அரசிக்காக நான் ஆண்டவ ராகிய கடவுளிடம் ஒவ்வொரு நாளும் ஜெபிக்கிறேன். அவரே அவளை தமது இஸ்பிரீத்துசாந்துவால் ஆசீர்வதிப் பாராக... சர்வேசுரனே எனது சாட்சி. இங்கே கூடியிருக்கும் எனது மரணத்தை விரும்பும் மேன்மை மிக்கவர்களின் முன்னிலையில் கூறுகிறேன். நான் உங்களது ஆன்ம இரட் சணியத்தையே விரும்புகிறேன். இதற்கு, நித்திய மகிழ்ச்சிக்கு ஒரே மார்க்கமாகத் திகழும் மெய்யான கத். விசுவாசத்தில் வாழ்வீர்களாக..." என்று கூறினார்.

நீதிபதிகளில் ஒருவரான சர். ஜான் சவிலா (Sir John Savila) என்பவன் சங். வால்போல் சுவாமியை துரோகி என்று குற்றம் சாட்டி அதற்கு ஆதாரமாக ஸ்பெயின் நாட்டு அரசரோடும், சேசு சபை குருக்களான சங். பெர்சன்ஸ் (Persons) சுவாமி மற்றும் சங். ஹோல்ட்பி (Holtby) சுவாமியிடமும் அவர் சில காலம் தங்கியிருந்து நட்புறவு கொண்டிருந்ததையும வெளிப்படுத்தினான். பின்னர் நீதிபதிகள் சங். வால்போல் சுவாமி மேன்மை மிக்க அரசியின் குடிமக்களை சட்டத்தால் நிறுவப்பட்ட மதத்திலிருந்து மனம் மாற்றுவதற்காகவும், குழப்புவதற்காகவும் ரோமை ஸ்தானத்தோடு அவர்களை ஒப்புரவாக்குவதற்காகவும் அவர் திரும்பி வந்துள்ளார் என்பது உறுதிபடுத்தப்பட் டுள்ளது என்று குற்றம் சாட்டினார்கள்.

அதற்கு பதில்மொழியாக சங். வால்போல் சுவாமி, "விசாரணை அதிகாரிகளான பிரபுக்களே! இதோ! நானே விரும்பி இவைகளை ஏற்று அறிக்கையிடுகிறேன்: ஆம்! நான் ஒரு குருவானவர் - சேசு சபையின் உறுப்பினர். எனது தேசத்தை கத்தோலிக்க சத்திய விசுவாசத்திற்கு மனந்திருப் பவும், பாவிகளை மனஸ்தாபத்திற்கு அழைக்கவும்தான் வந்தேன். ஆம்! இவைகளை நான் முழுமனதோடு ஏற்றுக் கொள்கிறேன், மறுக்கவில்லை. இவை எனது அழைத்தலின் கடமை. எனது இந்த அழைத்தலுக்கு வேறுபட்டு எதுவும் இருப்பின் எனக்குச் சொல்லுங்கள். அதே சமயம் உங்கள் மனசாட்சியின்படியும் நீங்கள் ஒருநாள் கடவுளுக்கு கணக்கு கொடுக்க வேண்டும் என்பதையும் மறவாதீர்கள்" என்று ஆணித்தரமாகக் கூறினார்.


அவரது பதிலில் தொனித்த யதார்த்தத்தையும், உண்மையையும் உணர்ந்து உள்ளம் கலங்கினாலும், நீதிபதிகள் "இவன் குற்றவாளி - தேசத்துரோகி" என்று தங்களது தீர்ப்பைக் கூறினார்கள். அதன் பின்னர், மீண்டும் சிறையில் அடைக்கப்பட்ட சங். வால்போல் சுவாமி, சங். ஹோல்ட்பி (Holtby) சுவாமி என்பவருக்கு கடைசியாக எழுதியக் கடிதத்தில் "...நாளை மறுநாள் நான் தூக்கிலிடப் படவுள்ளேன். நமது தந்தையர்கள், சகோதரர்களின் மேலான ஜெபங்களைக் கேட்கிறேன். உண்மையான கத்தோலிக்க இதயங்கள் அனைவரோடும் நான் மகிமை யோடு இணைந்து, நமது சர்வேசுரனும் சிருஷ்டிகரும், மீட்பரும், அர்ச்சியசிஷ்டவருமானவரிடம் ஜெபிக்கிறேன் என்பதை இஸ்பிரீத்துசாந்துவானவர் உங்களுக்கு வெளிப் படுத்தியிருப்பார் என்பதில் சந்தேகமில்லை... லண்டன் டவர் சிறையில் நான் அடைக்கப்பட்டிருந்த நாட்களைப் பற்றி உங்களிடம் எதுவும் கூறவில்லை. அதனை மோட் சத்தில் நாம் மீண்டும் சந்திக்கும்போது அறிந்துகொள் வீர்கள்" என்று குறிப்பிட்டார்.

1595 ஏப்ரல 7-ல் சங். ஹென்றி வால்போல் சுவாமி Douai குருவான சங். அலெக்ஸாண்டர் ராவ்லின்ஸ் சுவாமி யுடன் York Castleலில் இருந்து இழுத்துவரப்பட்டார். ஒரே கயிற்றால் தலையிலிருந்து கால் வரைக் கட்டப்பட்டதால் இருவரும் பேசிக்கொள்ளும் ஆறுதலைப் பெற்றனர். கைதி கள் இருவரும் Knavesmire என்ற கொலைக்களத்திற்கு கொண்டுவரப்பட்டனர். முதலில் ராவ்லின்ஸ் சுவாமி தூக்கிலிடப்பட்டு உடல் வெட்டப்பட்டு வேதசாட்சிய மடைந்தார். அதனைக் கண்டாவது, மனம் மாறுவார் என்று நினைக்கப்பட்ட சங். வால்போல் சுவாமி மிகுந்த துணிவோடும் உற்சாகத்தோடும் தூக்குமேடையில் ஏறினார். அருகிலிருந்த அதிகாரிகள் அரசியின் **புராட்டஸ்டாண்ட் ஆங்கிலிக்கன் சபையை** ஏற்றுக்கொண்டால் உயிர் பிழைக்கலாம் என்று ஆசை வார்த்தைக் கூறினார்கள். அப்போது "அரசியே திருச்சபையின் தலைவர்" என்பதை பற்றிய அவரது கருத்தைக் கேட்டனர். அதற்கு, "அவள் தானே உயர்ந்தவள் என்று கூறிக்கொள்கிறாள். ஆனால் நான் அதனை ஏற்கமாட்டேன். கடுமையாக மறுக்கிறேன்" என்று திடமாகக் கூறினார். அதனைக் கேட்ட அதிகாரிகள் "ஆஹா! இது தேசத் துரோகம்" என்று கூறினர்.

**தொடர்ச்சி 9-ம் பக்கம் காண்க . . .**

# தேவ ஆராதனை முறைமை

## திருப்பாடுகளின் காலம்



தபசு காலத்தின் இறுதிப்பகுதி பாடுகளின் காலம். இது தபசுக் காலத்தின் இறுதி இரு வாரங்களைக் கொண்டுள்ளது. ஆரம்ப கால வழிபாட்டுமுறைகளைக் கவனித்தால் 3-ம் நூற்றாண்டுகளிலிருந்தே கடைசி இரு வாரங்களையும் ஆண்டவரின் பாடுகளுக்கென்றே தனிமைப்படுத்தப்பட்டு அதை மட்டுமே தியானிக்க வகை செய்யப்பட்டுள்ளன. எனவே புனிதர்களின் விழாக்களோ அல்லது வேறு சிறப்பு வழிபாடுகளோ அனுமதிக்கப்படுவ தில்லை. வழிபாட்டுமுறைகளைக் கவனித்தாலும் பாடு களின் இரண்டாவது வாரமே மிக அதிகமான சடங்குகள், வழிபாடுகள் நிறைந்த வாரமாகக் காணப்படுகிறது. எனவேதான் அர்ச். கிறிஸ்தோஸோம் அருளப்பர், பெரிய வாரம் (Great Week) என அழைக்கிறார். இதையே திருச்சபை பரிசுத்த வாரம் என்று அழைக்கிறது.

பாடுகளின் ஞாயிறன்று ஜெப ஆராதனைகள் ஆரம்பமாகும் முன்பே எல்லா சுரூபங்களும் திரையால் மறைக்கப்பட்டிருக்கும். விசுவாசிகளின் கவனம் வேறு இடங்களுக்குச் செல்லாமல் ஆண்டவரின் பாடுகளையே சிந்திக்க இது தூண்டுகிறது. இந்த கடைசி வாரம் பாடுகள் அல்லது பாவப் பரிகார வாரம் என அழைக் கப்படுகிறது. வருடத்தின் மற்ற நாட்களைவிட இந்த வார உபவாசங்கள் குருக்களுக்கும், விசுவாசிகளுக்கும் கடுமை யானவை. அக்காலத்தில் நோன்பின் கடினம் மனிதன் தாங்கும் சக்தி வரை சென்றது. அநேகர் வாரம் முழுவதுமே அன்ன ஆகார மின்றி நோன்பிருந்தனர். கீழை நாட்டவர்கள் இன்றும் இவ்வழக்கத்தை அநுசரிக்கின்றார்கள். கிரேக்க கிறீஸ்தவர் கள் இந்தக் காலங்களில் சமையல் இல்லாத வரண்ட உணவுகளையே (ரொட்டி, தண்ணீர், பழங்கள், வேக வைக்காத காய்கறி) உணவாகக் கொள்கிறார்கள்.

உபவாசத்தோடு திருவிழிப்பும் சேருகிறது. பெரிய வியாழன், பெரிய வெள்ளிக்கிழமைகளில் இவை செயற்கை யாக ஏற்படுத்தப்பட்ட ஆண்டவரின் கல்லறையில் நடத்தப் பட்டது. பெரிய சனிக்கிழமை இரவில் ஞானஸ்நானம் பெறுகிறவர்களைத் தயார் செய்து ஞானஸ்நானம் கொடுக் கப்பட்டன. சில வேளைகளில் குருத்துவ அபிஷேகமும் நிகழ்ந்தன. இந்தப் பழக்கம் ரோமில் (Rome) இப்பொழுதும் தொடர்கிறது.

மத்திய காலங்களில் (Middle Ages) இந்த வாரத்தில் உடலுழைப்பு, நீதிமன்ற நடவடிக்கைகள் நிறுத்திவைக்கப் பட்டன. வணிகமும்கூட குறைத்துக்கொள்ளப்பட்டன. பெரிய வெள்ளியன்று பொது விடுமுறை விடும் வழக்கம் வழக்கில் இருந்தது. மேலும் இக்காலத்தில் பொது மன்னிப்பு வழங்கும் வழக்கமுமிருந்தது. கைதிகள், அடிமைகள் அல்லது பொதுமக்களுக்கு இடையூறு செய்யாத கைதிகள் விடுவிக்கப்பட்டனர். நோயோன் மேற்றிராணியார் அர்ச். எலோய் (Eloi 588 - 659), அவரின் வரலாற்றிலிருந்தும் பாரீஸ் பார்லிமெண்ட் நடபடிக்கைகளிலும் நாம் இவைகளை அறிகிறோம்.

பாடுகளின் ஞாயிறு பூசை நடைபெறும் இடம் (Station) ரோமிலுள்ள அர்ச். இராயப்பர் பேராலயம். இத்திவ்விய பலிபூசையில் பீடத்தினடியில் சொல்லும் "ஆண்டவரின் ஆலயத்தில் ... Introibo ad altare Dei" என்ற சங்கீதம் சொல்லப்படுவதில்லை. இந்த சங்கீதம் இந்த வாரமுழுமை யிலுமே சொல்லப்படுவதில்லை. இந்த ஞாயிறன்று 'யாம புகழ்'-ல் புதிய சங்கீதம் "இன்று ஆண்டவரின் குரலை கேட்பாயாகில் உன் உள்ளத்தைக் கடினப்படுத்திக்கொள் ளாதே" (சங். 94) பாடப்படுகிறது. இது ஞாயிறு முதல் பெரிய வியாழன் தெனபெரே (Tenebrae) வரை அனுசரிக்கப் படுகிறது. இந்த வாரம் முழுவதும் "திருத்துவ புகழ்" (பிதாவுக்கும் ...) சங்கீதங்களின் இறுதியில் பாடப்படுவ தில்லை.

### குருத்தோலை ஞாயிறு

பரிசுத்த வாரம் குருத்தோலை ஞாயிறு அன்று ஆரம்பமாகிறது. அன்று திவ்விய பலிபூசைக்குமுன் குருத் தோலை அர்ச்சிக்கப்படுவதால், இது குருத்தோலை ஞாயிறு என அழைக்கப்படுகிறது. இது நமது இரட்சகர் ஜெருசலேம் நகர பிரவேசத்தில் யூதர்கள் மரக்கிளைகள், ஆடைகளைப் பரப்பியும் கையில் குருத்தோலைப் பிடித்தும் வரவேற்றதின் நினைவாக இது நடைபெறுகிறது. இந்தப் பின்னணிச் சிந்தையோடு மூன்று "சுவிசேஷ" ஆசிரியர்களின் (மத். 21:1-7, மாற்கு 11:1-7, லூக். 19:29-35) விவரங்களையும் நாம் வாசிக்கிறோம்.

ஒய்வுநாளுக்கு அடுத்த நாள் பெத்தானியாவிலிருந்து சேசு ஜெருசலேம் புறப்படுகிறார். ஒலிவ மலையை அடுத் துள்ள பெத்பாஜேயை அடைந்ததும் சீடர்கள் இருவரை அனுப்புகிறார். "உங்களுக்கு எதிரே உள்ள ஊருக்குப் போங்கள். ஊருக்குள் நுழைந்தவுடன் இதுவரையும் எவரும்

பயன்படுத்தாத ஒரு கழுதையும் அதன் குட்டியும் கட்டியிருப்பதைக் காண்பீர்கள். அதை அவிழ்த்து என்னிடம் கொண்டுவாருங்கள். யாராவது உங்களிடம் என்ன செய்கிறீர்கள்? ஏன் அவிழ்க்கிறீர்கள்? என வினவினால், ஆண்டவருக்கு இது தேவைப்படுகிறது. தேவை முடிந்ததும் அவர் அனுப்பிவிடுவார் என அவர்களுக்குப் பதிலுரையுங்கள். அவர்கள் உடனே உங்களுக்கு அனுமதி அளிப்பார்கள்'' என மொழிந்தார். சீடர்கள் அவர் காட்டிய வழிப்படியே ஊருக்குச் சென்றனர். தெருவில் ஒரு கதவில் கட்டியிருந்த மிருகங்களைக் கண்டனர். அதை அவிழ்த்தார்கள். "என்ன செய்கிறீர்கள்? ஏன் அவிழ்க்கிறீர்கள்?'' என உரிமையாளர் அவர்களைக் கேட்டார். அவர்கள் "ஆண்டவருக்கு இவைத் தேவைப்படுகின்றன'' என்றவுடன் உரிமையாளர் உடனே அனுமதித்தார்.

அவர்கள் அவற்றை சேசுவிடம் கொண்டுவந்து கழுதை மீது தங்களுடைய ஆடைகளை விரித்து அதன் மீது அமர்த்தினார்கள். விழாவிற்காக ஜெருசலேம் வந்த பெருந்திரளான மக்கள் சேசு ஜெருசலேமுக்கு வருவதை அறிந்து ஒலிவ மலைக்கு அவரைச் சந்திக்கச் சென்றனர். சிலர் மரக் கிளைகளை வெட்டி பாதையில் பரப்பினர். பெருந்திரளானவர்கள் தங்கள் மேலாடைகளைப் பாதையில் பரப்பினர். மற்றவர்கள் தங்கள் கரங்களில் கிளைகளைப் பிடித்திருந்தனர். இதை அறிந்து சேசுவின் சீடர்கள் உற்சாகமேலிட்டால் தங்களின் கண்ணால் கண்ட அதிசயங்களுக்காக சர்வேசுரனைப் புகழ்ந்து பாடினர்.

"ஓசன்னா! ஆண்டவர் பெயரால் வருகிறவர் ஆசீர் பெற்றவர். இவர் யூதர்களின் இராஜா. நமது தந்தை தாவீதின் அரசு துவக்கப்படுவதால் அது ஆசீர் பெறுக. தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா. உலகில் சமாதானமும் உன்ன தத்தில் சர்வேசுரனுக்கு மகிமையும்'' என முழக்கமிட்டனர்.

சீடர்களைத் தொடர்ந்து சென்ற கூட்டத்தினரும் சர்வேசுரனைப் புகழ்ந்துகொண்டே சென்றனர். சேசு லாசரை உயிர்ப்பித்த நிகழ்ச்சியை அறிந்தவர்கள் அநேகரை அழைத்து வந்து கூட்டத்தைப் பெரிதுபடுத்தினர். இந்தக் கூட்டமும் நிகழ்ச்சிகளும் "சீயோன் குமாரத்தியே, இதோ உனது அரசர் பணிவோடும் சுமை சுமக்கும் கழுதை மீது அமர்ந்தும் உன்னிடம் வருகிறார்'' என்ற தீர்க்கதரிசனம் நிறைவேறுகிறது. சீடர்களுக்கு இந்த நிகழ்ச்சிகளின் முக்கியத்துவம் பற்றி ஒன்றும் தெரியவில்லை. ஆனால் சேசு உயிர்த்து மகிமை யடைந்த பின்புதான் இதை முழுமையாக அறிந்துகொண்டனர்.

உயிர்ப்பு ஞாயிறுக்கு முந்தைய உபவாச நாட்களின் வழிபாட்டு முறைகள் இக்காலத்தில் தேவ இரகசியங்களை விசுவாசிகளுக்கு குறித்துக் காட்டுகின்றன. இவ்வாரத்தில் வாசிக்கப்படும் வாசகங்களும், பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளின் வாக்குகளும், சேசுவின் பாடுகளின் சிறப்பை நினைவுகூறவும், சிந்திக்கக்கூடியவைகளாகவும் இருக்கின்றன. இது உண்மையிலேயே பாடுகளின் காலம். தீர்க்கதரிசிகளின் "சுவிசேஷகர்'' எனப் புகழப்படும் எரேமியாஸ், இந்த வார வாசகங்களில் பெரும்பங்கு வகிக்கிறார். இருதயத்தைக் கிழிக்கக்கூடிய போதனையை எடுத்துரைக்கும் கிறீஸ்துவின் பாடுகளின் முன்னறிவிப்பு கிறீஸ்தவ இருதயத்தை துக்கத்தின் ஆழத்திற்கு அழைத்துச் செல்கின்றன.


சேசுநாதர் எந்த ஜெருசலேமில் தனது பாடுகளைப் பட்டாரோ, அதே ஜெருசலேமில்தான் இந்த பரிசுத்த வாரச் சடங்குகள் ஆரம்பமாயின. நான்காம் நூற்றாண்டில் கான்ஸ்டான்டின் பேரரசரும், அவருடைய தாயாரும் எந்தக் கல்வாரி மலையிலிருந்து திருச்சிலுவையை கண்டெடுத்தார்களோ, அங்கே இந்தப் பரிசுத்த வார சடங்குகள் நடைபெற்றது. அங்கிருந்துதான் இந்தத் திருச்சடங்குகள் பிற கிறீஸ்தவ சமூகங்களிலும் சில மாற்றங்களுடன் நிறைவேற்றப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, அவர்களின் காலக்கணக்குப்படி மாலை 5 மணிக்கு சேசுநாதர் ஜெருசலேமில் நுழைந்தார் எனக் கணக்கிட்டு அந்த நேரத்தில் வழிபாடு ஆரம்பமாயிற்று. பின்பு மேற்றிராணியார் ஆலயத்தை விட்டு வெளியே வர அவரைத் தொடர்ந்து மக்களும் பாடல் பாடிக்கொண்டு ஊர்வலம் வந்தனர். "தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா! ஆண்டவர் பெயரால் வருகிறவர் ஆசீர் பெற்றவர். இஸ்ராயேலின் தேவனே உன்னதத்தில் உமக்கு ஓசன்னா'' எனப் பாடி ஊர்வலம் வந்தனர். அப்பொழுது கைக்குழந்தைகள் தங்கள் கரங்களில் குருத்தோலையோ அல்லது ஒலிவ கிளைகளையோ அசைத்து மகிழ்ந்தனர்.

மேற்றிராணியார் ஒரு கழுதை மீது அமர்ந்து ஒலிவ மலை சமீபமாகவுள்ள உயிர்ப்பின் ஆலயத்தை நோக்கி ஊர்வலம் வருவார். உயர்நிலை மக்கள் இளவரசர் உயர்நிலை குருத்துவ அதிகாரங்களும் குதிரை மீது அமர்ந்து உடன் வருவர். இந்த ஊர்வலம் மெதுவாகத்தான் ஊர்ந்து வரும். மக்களும் ஓலை அல்லது ஒலிவ கிளைகளை அசைத்தும் அவற்றைப் பாதையில் பரப்பியும் தொடர்ந்து வருவார்கள். நன்கு கவனித்தால் இது பரிசுத்த தலத்தில் நடந்தது போன்றதாகும். இவைகள் அனைத்தும் ஆண்டுதோறும் கொண்டாடும் வழிபாட்டுமுறைகளிலிருந்து தொடர்ந்து வருபவை என அறியலாம். இவைகளில் மக்கள் பெருமளவில் கலந்துகொண்டார்கள்.

• • • • • • •

**7-ம் பக்கம் தொடர்ச்சி ...** ஆனால் சங். வால்போல் சுவாமி அமைதியாக தமது சாவுக்குக் காரணமானவர்களுக்காக ஜெபித்தார். பின்னர் சற்று உரத்தக் குரலில் "பரலோக மந்திரத்தை'' ஜெபித்தார். பிறகு "அருள் நிறை'' மந்திரத்தை தொடங்கி ஜெபித்துக் கொண்டிருக்கும் போதே அவர் நின்றிருந்த ஏணி அகற்றப் பட முரட்டு சுருக்குக் கயிறு அவரது கழுத்தை இறுக்கியது. அவரது புனித உடல் எந்தவித எதிர்ப்பையும் காட்டாமல் விரைத்தவாறு தொங்கியது. இறக்கும்வரை அவர் உடல் தொங்கவிடப்பட்டு, பின்னர் உடல் துண்டு துண்டாக வெட்டப்பட்டது. அன்று 1595 ஏப்ரல் 7-ம் நாள். ஆம்! அவரது மனங்கவர்ந்த சங். எட்மண்ட் சுவாமியின் வேதசாட்சியத்தின் போது சிதறிய இரத்தத் துளிகள் தம்மீது பட்டு சரியாக 14 ஆண்டுகள் 97 நாட் களுக்குப் பிறகு வேதசாட்சியமடைந்தார் ஹென்றி வால்போல்!

**அர்ச். ஹென்றி வால்போலே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்!**




# அர்ச். கிளாரம்மாள்

குழந்தைகளே! அர்ச். கிளாரம்மாள் 1193–ம் ஆண்டில் இத்தாலி தேசத்தில் அசிசி என்ற ஊரில் பெரிய பணக்காரக் குடும்பத்தில் பிறந்தாள். அவளுக்கு 18 வயது நடக்கும்போது, ஒருநாள் கோவிலில் அர்ச். பிரான்சிஸ் அசிசியார் என்பவரின் பிரசங்கத்தைக் கேட்டாள். அவள் மனம் மாறியது. தனது பெரிய அரண்மனை யையும், தனது குடும்பத்தாரையும் விட்டுவிட்டு சேசுவுக்காக மட்டுமே வாழ விரும்பினாள். இதற்கு தனது நீண்ட அழகான தலை முடியை வெட்டினாள். முரடான அங்கியை அணிந்து ஜெபம் செய்யத் தனிமையாக வாழ்ந்தாள்.



கொஞ்ச நாளிலே, அவளைப் போல சேசுவுக்காக வாழ நிறைய பெண்கள் விரும்பினார்கள். கிளாரம்மாளோடு சேர்ந்து ஜெபம் செய்வதிலும், சேசுவை நேசிப்பதிலும் ஈடுபட்டார்கள். இப்படியாகத்தான் ஏழை கிளாரம்மாள் சபை தோன்றியது.

ஒரு தடவை 2–ம் பிரடெரிக் என்ற ஒரு கெட்ட அரசன் இருந்தான். அவன் நமது ஆண்டவர் சேசுவை வெறுத்தான். அந்தக் கெட்ட அரசன் அசிசி நகரைத் தாக்க பெரிய படையோடு வந்தான். கிளாரம்மாள் இருந்த மடத்தையும் தாக்கினான். ஆனால் கிளாரம்மாள் ஆண்டவரிடம் தங்களைக் காப்பாற்றும்படி ஜெபித்தாள். பின்னர் நற்கருணைப் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு எதிரிகள் முன்பாக வந்தாள். என்ன ஆச்சரியம்! நற்கருணை பாத்திரத்தில் இருந்து வெளிச்சம் வந்தது. பெரிய ஒளி தோன்றியது! அதனால் எதிரிகள் பயந்து ஓடிவிட்டனர். நற்கருணை ஆண்டவரால் அர்ச். கிளாரம்மாள் மடம் அன்று காப்பாற்றப்பட்டது. நீங்களும் நற்கருணை சேசுவை நேசிப்பீர்கள் தானே?


அர்ச். கிளாரம்மாள் பரிசுத்தமாக வாழ்ந்து வந்தார்கள். கடைசியாக 1253–ம் வருடத்தில் பரிசுத்தமாக இறந்து போனார்கள். சேசுவால் மோட்சத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, இன்னமும் அங்கே இருக்கிறார்கள்.

பிள்ளைகளே! அர்ச். கிளாரம்மாளைப் போல சேசுவை நேசிப்பீர்களா? அவருக்காக உங்களைக் கொடுப்பீர்கள் தானே? அப்படியானால் நீங்களும் சேசுவோடு மோட்சத்திற்குப் போவீர்கள் தானே!

சரி! உங்களுக்கு அர்ச். கிளாரம்மாளின் வாழ்க்கையை அறிய விருப்பம் வருகிறதா? இதோ படத்தின் மூலம் அதனை அறியலாம்.


**தியான அறிக்கை**

**அர்ச். இஞ்ஞாசியார் முறைப்படியான 5 நாட்கள் உள்தியானம் ஏற்காட்டில் உள்ள அர்ச். பிரான்சிஸ் சலேசியாரின் குமாரத்திகள் சபை மடத்தில் (The Daughters of St. Francis de Sales) நடைபெற உள்ளது. ஆண்களுக்கு: மே 18 முதல் 23 வரையும்; பெண்களுக்கு: மே 25 முதல் 30 வரை ஆங்கிலத்தில் நடைபெறும். கட்டணம் ரூ.1500/- மட்டும். விபரங்கட்கு 'சால்வே ரெஜினா' அலுவலகத்தை தொடர்புகொள்ளவும்.**







1. ஒரு குருத்தோலை ஞாயிற்றுக்கிழமையில் கோவிலில் சிறுமியாயிருந்த கிளாரா ஜெபித்துக் கொண்டிருக்கிறாள். மேற்றிராணியார் குருத்து ஓலைகளை கோவிலில் இருந்தவர்களுக்கு கொடுத்தார். கிளாராவிடம் தனியாக பெரிய குருத்து ஓலையை வழங்கினார். அது அவளுக்கு ஓர் அடையாளமாய் இருந்தது.

2. அன்று இரவில் கிளாரா, தனது தோழி போனாவோடு வீட்டையும், பெற்றோரையும் விட்டுவிட்டு சேசுவுக்காக வாழ வெளியேறினாள்.




3. இருட்டில் நடந்த அவர்களுக்கு அர்ச். பிரான்சிஸ் அசிசியாரும் அவரது துறவிகளும் துணையாக வந்தனர்.




4. அசிசி ஊரில் இருந்த சம்மனசுக்களின் இராக்கினி என்ற மாதா கோவிலுக்கு கிளாராவை அழைத்துக் சென்றனர். அங்கு சேசுவுக்கு தன்னை கொடுத்தாள் கிளாரா. அதற்கு அடையாளமாக அவளின் அழகான தலைமுடி வெட்டப்பட்டது!




5. கிளாரா தன் விலையுயர்ந்த ஆடை களுக்குப் பதிலாக முரடான துறவு உடையை சேசுவுக்காக அணிந்து கொண்டாள். சேசுவுக்காக ஒரு கன்னியராக வாழத் தொடங்கினாள்.

(தொடரும்)

# அர்ச். பத்தாம் பத்திநாதரின் திருச்சபையைக் குறித்தான ஆவல்கள்!

(அர்ச்.10–ம் பத்திநாதர் பாப்பரசரின் திருச்சபை எப்படியிருக்கவேண்டும், நவீனர்களால் அது எவ்வாறு பாதிக்கப்படும் என்பதையும், அதனை எதிர்த்து பாப்பரசரின் முயற்சிகள் மற்றும் அவரது ஆவல்களைப்பற்றி வந்.மே. திஸ்ஸியர் தே மலரே ஆண்டகையவர்கள் நிகழ்த்திய பிரசங்கத்தின் தமிழாக்கம் இங்கே வெளியிடப்படுகிறது. இந்தப் பிரசங்கம் 2003–ம் ஆண்டு நவம்பர் 16–ம் நாளன்று பிரான்ஸ் நாட்டு கோல்மா நகரில் அர்ச். ஜோசப் இல்லத்தில் நிகழ்த்தப்பட்டது. ஆர்.)

## 4

### விசுவாசத்தைப்பற்றிய நவீனர்களின் கண்ணோட்டம்! (தொடர்ச்சி)

அர்ச். பத்தாம் பத்திநாதர் நவீனம் என்ற தப்பறையை தனது முழு பலத்தையும் கொண்டு எதிர்த்தார். எதிர்த்து ஒடுக்கப்பட்ட இப்பயங்கரமான தப்பறைகள் திருச்சபையில் இப்பொழுது திரும்பவும் அகலப் பரவியிருக்கிறது. அநேக குருக்கள், கிறீஸ்துநாதர் மெய்யாகவே சர்வேசுரனின் திருக்குமாரன் என்பதை விசுவசிப்பது இல்லை. நடைமுறையில் அவர்கள் இஸ்லாமியரைப் போல் ஆகிவிட்டார்கள். அவர்கள் நம் ஆண்டவருடைய தெய்வீகத்தை விசுவசிப்பதில்லை.



ஆகையால்தான், தவறான எல்லை மீறும் 'அறிவியலை' கண்டு குற்ற உணர்வைக் கொண்ட மனசாட்சியை கொண்டிருக்கிறார்கள். இவ்விதமான மனசாட்சியை கொண்டிருப்பதால், எல்லாவற்றையும் கைவிட்டதுமல்லாமல் கத்தோலிக்க விசுவாசத்தை பகிரங்கமாக அறிக்கை செய்வதற்குப் பயப்படுகிறார்கள். தவறான "மனித அறிவியலால்" ஏற்படுத்தப்பட்டிருக்கிற சூழ்நிலைக்குத் தக்க தங்களை மாற்றிக்கொள்கிறார்கள். சர்வேசுரனைச் சார்ந்து, அவர்மேல் தங்களை நிலைநிறுத்திக்கொள்ள மறுத்து 'மனிதம்' என்ற மணலில் கட்டுகிறார்கள். இவர்களுக்கு விசுவாசம் அல்லது வேதம் என்பது சர்வேசுரனை, அவருடைய சட்டங்களை, கட்டளைகளை ஏற்றுககொள்வதில் அல்லாமல், வெறும் 'மனித உரிமைகளாக' இருக்கிறது. சர்வேசுரனுடைய இடத்தில் மனிதனை வைக்கிறார்கள். இவ்வாறு கட்டிடமானது பாறையாகிய சர்வேசுரன் மேல் கட்டப்படாமல் மனிதன் என்ற மணலில் கட்டப்படுகிறது; அது வீழ்கிறது.

### வேத சாஸ்திரங்களை குறித்தான நவீனர்களின் பார்வை :

அர்ச். பத்தாம் பத்திநாதரால் கண்டிக்கப்பட்ட நவீனத்தில் வேத சாஸ்திரத்தின் நிலை என்ன? எல்லா மதங்களும் 'சமய உணர்வின்' வெளிப்பாடாய் இருப்பதால் விசுவாச வேத சாஸ்திரங்கள் மாற்றம் அடையவேண்டும். உள்ளுணர்வு மாறுவதால், வேத சாஸ்திரமும் மாறவேண்டும். வேத சாஸ்திரம் மாறவேண்டும் என்ற கருத்தை உரோமையில் பல கர்தினால்மார்கள் ஒப்புக்கொள்ளத்தான் செய்கிறார்கள். இவர்களுடைய சிந்தனையின்படி கருத்து, எதிர்கருத்து, ஒருங்கிணைந்த கருத்து என்ற உரையாடலின் பாதையில் வேத சாஸ்திரம் மாறும். கர்தினால் ரட்சிங்கருடைய (தற்போதைய பாப்பானவர்) சிந்தனை இப்படித்தான் இருக்கிறது. கர்தினால் கஸ்பாரின் சிந்தனையும் இதுவே. இதற்கும் கத்தோலிக்க விசுவாசத்திற்கும் தொடர்பு எதுவும் இருக்கமுடியாது!

### நவீனர்களின் பார்வையில் பாரம்பரியம் :

பாரம்பரியத்தைக் குறித்து நவீனர்களின் கருத்தென்ன? பாரம்பரியமானது சமய அனுபவத்தை கைமாற்றும் வகை. ஒருவர் கொண்டிருக்கும் சமய அனுபவத்தை பிறருக்குக் கொடுப்பது. புத்த மதத்தினர் 'போற்றத்தக்க' தங்களுடைய சமய அனுபவங்களை கொண்டிருக்கிறார்கள். துலுக்கர்கள் தங்களுடைய அனுபவங்களைக் கொண்டிருக்கிறார்கள். இவைகள் மதிக்கப்படத் தக்கவை. அதுதான் நவீனர்கள் பாரம்பரியத்திற்கு கொடுக்கும் பொருள்!

இவ்வாறுதான் எல்லா மதங்களும் காலம், இடம் மக்களுக்கு தகுந்தவாறு தீர்ப்பு வழங்குவதற்கான அடிப்படை மாறக்கூடியதாக கொண்டுவரப்படுகிறது. எல்லா மதங்களும் சமய அனுபவங்களை கொண்டுள்ளது. கத்தோலிக்க வேதம் பிற மதங்களோடு அதே அளவிற்கு பொய் மதங்களின் நிலையில் வைக்கப்படுகிறது. இச்சமய அனுபவத்தை கத். திருச்சபையின் அடித்தளமாக கொண்டிருந்தால், அதை அஞ்ஞான தேவர்களின் பொய் மதங்களுக்கு சமமாக வைக்கத்தான் செய்வார்கள்!

தொடர்ச்சி 14–ம் பக்கம் காண்க . . .

# ஞான குழந்தைத்துவத்தின் சிறிய வழி!

(அர்ச். குழந்தை சேசு தெரேசம்மாள் காட்டிய ஞான குழந்தைத்துவம் (Spiritual Childhood) என்ற சிறிய வழியைப் பற்றிய விளக்கம். அர்ச். தெரேசம்மாளையும், அவளது சொந்த சகோதரிகளையும் நன்கு அறிந்தவரான சங். மார்டின் சுவாமி என்பவர் எழுதிய " The Little way of Spiritual Childhood" என்ற நூலின் தமிழாக்கம். ஆர்.)

## இரண்டாம் அத்தியாயம்

## சிறிய தன்மையும் பலவீனமும்

ஒரு சிறு குழந்தையின் முதல் அடையாளம் சிறியதாக இருப்பதே. அதனுடைய வளர்ச்சிக்கேற்ப குழந்தை பருவத்தை விட்டு பெரியவனாக மாறுகிறது. ஞான குழந்தைத்துவத்தின் சிறு வழியில் நுழைவதற்குத் தேவையான முதல் காரியம், சர்வேசுரனுடைய சமூகத்தில் மிகமிகச் சிறியதாக மாறுவதுதான். சிறியதாக இருப்பதென்றால், உத்தமமான விதத்தில தாழ்மையாக இருப்பதே. அது நாம் என்னவாக இருக்கிறோமோ, அப்படியே நம்மை காண்பது. சர்வேசுரனுடைய இரக்கம் நமக்கு இல்லாமலிருந்திருந்தால் எந்த நிலையில் நாம் இருப்போமோ அப்படியே நம்மைக் காண்பதாகும். வேறு வார்த்தைகளில் சொல்வோமேயானால், வெறும் ஒன்று மில்லாமையாக, ஒன்றுமே இல்லாமல் இருப்பதாகும். இப்படிக் காண்பதோ அல்லது கருதுவதோ மட்டுமின்றி, மேற்கூறியவாறே நம்மை நாம் காண விரும்புவதும் அதைக் கண்டு மகிழ்வதுமாகும்.



ஒருவன் தன் அவல நிலையை முழுவதுமாக அறிந்திருந்த அதே வேளையில் அளவுக்கதிகமான அகங்காரத்தோடு இருக்கக்கூடும். உதாரணம்: பசாசு. மெய்யான தாழ்ச்சி என்பது நாம் இருக்கும் தாழ்நிலையைக் காண்பதில் அல்ல. மாறாக அப்படிப்பட்ட நமது தாழ்நிலையை விருப்பத்தோடு நோக்குவதில் அடங்கியிருக்கிறது. இதுதான் இருதய தாழ்ச்சி, மெய்யான தாழ்ச்சியாகும். இதுவே சிறுபிள்ளையினுடைய தாக இருக்கவேண்டும்.

### 1. குழந்தைத்துவத்தின் சிறிய வழியில் இருதய தாழ்ச்சி என்ற புண்ணியத்தை எவ்வளவாய் மதித்து விரும்பவேண்டும் என்பதைக் குறித்து :

கிறீஸ்தவ ஆன்மாவே, நீ சர்வேசுரனுடைய பார்வையில் ஒரு சிறிய குழந்தையாக, அவருடைய திரு இருதயத்திற்கு பிரியமுள்ளதாக இருக்க ஆசித்தால், முதலில் உன்னுடைய கண்களுக்கு உன்னையே எவ்வளவு சிறியவனாக காணமுடியுமோ அப்படி உன்னை ஆக்கிக்கொள்ளத் துவங்குவாயாக. உன்னுடைய உண்மையான நிலையைக் கண்டுகொள்ள வழிதேடு. உன்னில் நன்மையானவைகளும் உண்டு, தீமையானவைகளும் உண்டு. நன்மையானவைகள் அனைத்துமே சர்வேசுரனிடமிருந்து வருகிறது. அவைகளுக்காக அவருக்கு நன்றி சொல்வதில் பிரமாணிக்கமாயிரு. தீமையானவைகள் அனைத்தும் உன்னிடமிருந்து வருகிறது. உன்னையே நீ அறிந்துகொள்ளவும், வெறுக்கவும் இவைகளைப் பயன்படுத்திக்கொள். ஏனெனில் நன்மை செய்ய திறனற்ற தன்மை, பாவச்சார்பு, சுயபற்று இத்தகைய தோல்விகள், இந்தத் தவறுகள் யாவும் உனது ஆன்மாவின் ஆழத்தில் வேர் கொண்டுள்ளன. இவை உனது குறைபாடுகளின் விளைவுகளாக இருக்கின்றன. இவைகள் அனைத்தையும் முழுமையாக நோக்குவாயாக. இப்பெரிய அவலநிலையை தெளிவாக நோக்க அஞ்சாதே. எல்லாவற்றிற்கும் மேலாக இவை உன்னை கவலையடையச் செய்யாமல் பார்த்துக்கொள். மாறாக, எந்த அளவுக்கு உன்னில் சக்தியின்மையையும், பலவீனங்களின் புதிய ஊற்றின் ஆழத்தையும் காண்கிறாயோ, அந்த அளவிற்கு அகமகிழ்வாய்!

அர்ச். குழந்தை சேசுவின் தெரசம்மாள் அப்படிதான் நடந்தாள். "நான் பலவீனமானவளாக இருப்பதைக் கண்டு வருந்தவில்லை. மாறாக இதில்தான் நான் மகிமையடைகிறேன். ஒவ்வொரு நாளும் என்னிடத்தில் புதிய குறைபாடுகளைக் கண்டுபிடிக்க விரும்புகிறேன். என்னுடைய ஒன்றுமில்லாமையைக் குறித்தான இத்தகைய வெளிச்சமானது, விசுவாச சம்பந்தமான வெளிச்சத்தைவிட எனக்கு அதிக நன்மைகளைத் தருகிறது" என்று கூறுகிறாள்.

இத்தகைய ஈர்ப்பும், வெளிச்சமும் தனது இரட்சகரிடமிருந்து வருகிறது என்பதைத் தெளிவாய் உணர்ந்து, ஒரு ஆன்மாவிற்கு அருளப்படக்கூடிய விலைமதிப்பில்லா வரப்பிரசாதங்களில் ஒன்றாக கருதி அதற்காக அவருக்கு நன்றி செலுத்தினாள். மேலும் அவள் கூறுவதாவது, "சர்வ வல்லவர் என்னில் பெரிய காரியங்களை நிகழ்த்தியிருக்கிறார். இவைகளில் மிகப் பெரியது என்னுடைய சிறிய தன்மையையும், எனது நன்மை செய்ய திறனற்ற தன்மையையும் எனக்கு காட்டித் தந்ததே!" ஆகையால் அவளுடைய ஒன்றுமில்லாமையைக் கற்றுக்கொடுப்பதற்கு உதவியாயிருந்தவைகள் அவளுக்குப் பிரியமுள்ளதாகவும், விலைமதிப்பற்றதாகவும் இருந்தது. நமது சொந்த பலவீனங்களை அனுபவம் வாயிலாக ஏற்றுக்கொள்வதைவிட வேறு எதுவும் நமக்குப் பயன் தரக்கூடியவிதமாக கற்பிக்க முடியாது. அர்ச். குழந்தை சேசு தெரசம்மாளின் அனுபவம் ஏதெனில், அவளுடைய குறைபாடுகள் அவளை மனம் நோகச் செய்யாமல் சந்தோஷத்திற்கே காரணமாயிற்று. குறிப்பாக பலவீனத்தினால் செய்யப்படும் குற்றங்கள் நல்ல கடவுளை நோகச்செய்வதில்லை என்பதை அறிந்த நாள்முதல் மகிழ்ச்சியையே தந்தது. **"ஒவ்வொரு கனமும் நான் தவறினால் எனக்கென்ன? இந்த வீழ்ச்சியினால் நான் என் பலவீனத்தை உணர்ந்து அதில் நான் அதிகப் பயன் பெறுகிறேனே! என் சர்வேசுரா! நீர் என்னை உமது கரங்களில் ஏந்திச்செல்லா விட்டால் நான் என்ன செய்யமுடியும்"** என்று அர்ச். தெரசம்மாள் கூறிகிறாள்.

இங்குதான் தாழ்ச்சி என்ற புண்ணியத்தினுடைய மறுக்க முடியாத ஓர் அடையாளம் இருக்கிறது. மெய்யான தாழ்ச்சியுள்ள ஆன்மா தன்னுடைய வீழ்ச்சியைக் குறித்து ஆச்சரியப்படாது. இந்த ஆத்துமத்தை வியப்படையச் செய்வது, வீழ்ச்சியடைவது மட்டுமல்ல, ஆனால் தான் இன்னும் அதிக தடவையாகவும், கனமான முறையிலும் விழவில்லையே என்பதுதான்.

சின்னஞ்சிறிய குழந்தை நடக்கும்பொழுது கீழே விழுந்தால் நாம் ஆச்சரியப்படுவோமா? தானாக நேரே நிற்க இயலாத குழந்தை எப்படி தவறான அடியெடுத்து வைக்காமல் இருக்கும். ஆனால் சாதாரணமாக, சிறு குழந்தைகள் கீழே விழுந்தால் அவை அதிகமாக அடிபடுவதில்லை. ஏனெனில் அவை அதிக உயரத்திலிருந்து விழுவதில்லை. இவ்வாறுதான் சிறிய ஆன்மாக்களும்! அவர்களின் காயம் பெரிதாக இருப்பதில்லை. காயப்பட்டது போலவே குணமாக்கப்படுகிறார்கள் என்றுமானாலும் கூறலாம். இச்சிறிய ஆன்மாக்களின் வீழ்ச்சியானது அதனை பலவீனமடையச் செய்வதற்குப் பதிலாக, மீண்டும் எழுந்து முன்னைவிட அதிக உறுதியடையச் செய்கிறது. ஏனெனில் அதிக வீழ்ச்சியின் அனுபவம், அவைகளை மிகவும் தாழ்ச்சியுடையதாக ஆக்குகிறது. அர்ச். சின்னப்பருடைய வாக்கியத்தைத் தனதாக்கிக்கொண்டு, அர்ச். குழந்தை சேசுவின் தெரசம்மாள் **"என்னுடைய பலவீனமே என்னுடைய பலமாக இருக்கிறது"** என்று சொல்ல ஆசிக்கிறாள்.

ஏனெனில், இருதயத் தாழ்ச்சி என்ற புண்ணியத்தை அறிந்து ஏற்றுக்கொண்ட எல்லா ஆன்மாக்களும் இவ்வாறு தான் பேசுவார்கள்.

(தொடரும்)

**12-ம் பக்கம் தொடர்ச்சி . . .** துரதிர்ஷ்டவசமாக, இதே கருத்தைதான் (அப்போதைய) பாப்பானவர் 2-ம் அருள் சின்னப்பர், "என்னுடைய விசுவாசம், நான் கொண்டிருக்கும் விசுவாசம் முழுவதும் என்னுடைய தேடுதலின் பலனே" என்று கூறி இருக்கிறார். இது நவீனருடைய பாணியில் சொல்லப்பட்ட வார்த்தைகள். ஆனால் உண்மையான கத். பாரம்பரியம் அதுவல்ல! ஏனென்றால், நம்முடைய விசுவாசம் நம்முடைய சொந்த தேடுதலின் கனி அல்ல. நமது விசுவாசத்தை நம்முடைய பெற்றோர்களிடமிருந்து நாம் பெற்றிருக்கிறோம். நமக்கு ஜெபிக்க கற்றுக்கொடுத்தது நம் தாய். விசுவாசம் விசாரணை உடையவோ, தேடுதலின் உடையவோ பலன் அல்ல; நாம் திருச்சபையிடமிருந்து ஞானோபதேசத்தின் மூலமாய் பெற்றுக்கொண்டோம். அதை நாம் தேடவில்லை. அது நமக்குத் தரப்பட்டது. ஆகவே விசுவாசம் என்பது நமது அனுபவத்தின் பலனோ, தேடுதலின் பலனோ அல்ல. விசுவாசம், நமது புத்தி அறிவு தெய்வீக உண்மையை ஏற்றுக்கொள்வதில் அடங்கும். பாப்பானவர் 2-ம் அருள் சின்னப்பரின் கத். விசுவாசத்தை குறித்தான வார்த்தைகள் இருபொருள் தரக்கூடிய வார்த்தைகளாக உள்ளன.


(தொடரும்)

# ஏழைக்கு செய்த உதவி!

குளிர்காலத்தின் ஒரு இரவில் ஏழை பிச்சைக்காரன் ஒருவனை மார்ட்டின் என்பவர் கண்டார். கடுங்குளிரில் அவன் நடுங்குவதைக் கண்டு மனமிரங்கியவராக அவன் போர்த்திக்கொள்ள, தாம் மூடியிருந்த நீண்ட மேலாடையை இரண்டாகக் கிழித்து ஒரு பாதியை அந்த ஏழைக்குக் கொடுத்தார், அன்றிரவு மார்ட்டினுக்கு அவர் வழங்கிய உடையை அணிந்தவராக நமதாண்டவர் காட்சியளித்தார். அப்போது சேசு "இதோ பாருங்கள். மார்ட்டின் இன்னமும் ஞானஸ்நானம் பெறவில்லை. ஆயினும் தன் உடையை எனக்குத் தந்தான்" என்று தம்முடைய சம்மனசுக்களிடம் கூறுவதைக் கேட்டார். அதனால் மனம் மாறிய மார்ட்டின் கிறீஸ்தவராகி, மேற்றிராணியாராகி, பெரிய அர்ச்சியசிஷ்டவரானார்!

# திரிதெந்தீன் திவ்விய பலிபூசையை

## அறிந்து கொள்வோம்!



[கத்தோலிக்கத் திருச்சபையின் பொக்கிஷமான திரிதெந்தீன் திவ்விய பலிபூசை ஒருபோதும் தடைசெய்யப்படவில்லை. அது திருச்சபையில் நித்தியமாக நிறுவப்பட்டுள்ள மெய்யான கல்வாரி பலியாகும். இப்பூசையில் சிறந்த முறையில் பங்கேற்பது நமது விசுவாச வாழ்வுக்கு உறுதுணையாக இருக்கும். அதற்கு பூசையின் ஒவ்வொரு பகுதியையும், அதன் முக்கியத்துவத்தையும் விசுவாசிகள் அறிந்து கொள்வது அவசியம். அதற்கு இத்தொடர் உதவும். – ஆசிரியர்]

### முதல் பாகம்

#### இரண்டாம் பிரிவு (உபதேசப் பாகம்)

### 7. படிக்கீதம், அல்லேலூயா, நெடுங்கீதம், தொடர்கீதம்

#### அல்லேலூயா கீதம் – (Alleluja)

எபிரேய மொழியில் **'அல்லேலூயா'** என்பதற்கு ஆண்டவரை வாழ்த்துவோம் என்று பொருள்படும். இந்த வார்த்தை மிகுந்த உள்ளார்ந்த பொருள் தருவதாகவும், உணர்வுகளின் வெளிப்பாடாகவும், 'ஆண்டவரை வாழ்த்துவோம்' என்ற பொருளை அழுத்தமாகச் சுட்டிக்காட்டும் மாற்ற முடியாத வார்த்தையாக இருப்பதால் அது வேறு மொழியில் மொழிமாற்றம் செய்யக்கூடாததாக இருக்கிறது.



அல்லேலூயா கீதம் பரலோக சந்தோஷப் பாடலாகவும், உடைந்துபோன நம் எளிய இதயங்களுக்கு ஆறுதலான சிந்தனைகளால் ஊக்கமூட்டுவதாகவும் திகழ்கின்றது. தேவ ஊழியத்திலும், புண்ணிய பயிற்சியிலும் நம்மை உற்சாகப்படுத்துகிறது. ஆன்மாக்களை பரலோகப் பரவசத்திற்கு எழுப்பி முடிவில்லா ஜீவியத்திலும், பிரகாசத்திலும், கவலை கலவாத மகிழ்ச்சியிலும் உலாவச்செய்கிறது. இதனாலேயே பாடற் பூசையில் அல்லேலூயா கீதத்தின் கடைசி உச்சரிப்பானது வார்த்தையில்லா தொனியுடன் தொடர்ந்து ஒலிக்கின்றது.

அல்லேலூயா மோட்ச ஜெருசலேமின் கீதமாக ஒலிக்கின்றது. இக்கீதம் தபசுக்காலத்தில் மறைந்துவிடுகிறது. ஆனால் உயிர்ப்பு ஞாயிருக்கு முந்தின நாள் நிருபத்திற்குப் பிறகு தொடர்கீதத்தின் தொடர்ச்சியாக அல்லேலூயா படிக்கப்படுகிறது. அச்சமயத்தில் குருவானவர் மூன்று வேறுபட்ட தொனியில் - இராகத்தில் அல்லேலூயாவைப் பாடி வரவிருக்கும் உயிர்ப்புத் திருநாள் மகிழ்ச்சியை வெளிப்படுத்துகிறார். உயிர்ப்புத் திருநாளில் தொடர்கீதமும், நெடுங்கீதமும் படிப்பதற்கு மாறாக மகிழ்ச்சின் விளைவாக அல்லேலூயா மீண்டும் மீண்டும் பாடப்படுகிறது. பாஸ்கு காலம் முழுவதும் இது படிக்கப்படுகிறது.

தொடக்கக் காலத்தில் துக்கப் பூசையிலும் அல்லேலூயா பாடப்பட்டது. ஏனெனில் கிறீஸ்தவனின் பரிசுத்த மரணம் ஆறுதலும் இளைப்பாற்றியும் நிறைந்ததாதலால் (காட்சி. 14:13) அது மகிழ்ச்சிக்குரியதாகவே கருதப்பட்டது. கிரேக்கர்களின் வழிபாட்டில் அல்லேலூயா தபசுக் காலத்தில்கூட பாடப்பட்டு வந்தது. ஆதித் திருச்சபையில் வழிபாட்டு நேரம் மட்டுமல்லாது, மற்ற நேரங்களிலும், அல்லேலூயா பொதுவாக இசைக்கப்பட்டு வந்தது. அர்ச். ஜெரோம், சிறுவர்கள்கூட அல்லேலூயா பாடப் பயிற்சிவிக்கப்பட்டார்கள் என்று கூறுகிறார். பெத்லேகத்தில் இந்த கீதம் எல்லா இடங்களிலும் பாடப்பட்டதை தாம் கேட்டதாக அவர் கூறுகிறார். ஆகவே அல்லேலூயா பாடல் தொனி பூமியிலே சர்வேசுரனை ஆராதித்து துதிக்கப் பயன்படுத்தப்பட்டு வந்த ஒரே குரலாக, சப்தமாக இருந்து வந்தது.

முத்திபேறு பெற்ற மோட்ச ஜெருசலேம் வாசிகளும், சம்மனசுக்களும், அர்ச்சியசிஷ்டவர்களும் இடைவிடாமல் தொடர்ந்து முடிவற்ற விதமாக அல்லேலூயா இசைப்பதாக தோபியாஸ் ஆகமத்தில் குறிக்கப்பட்டிருக்கிறது.

''ஜெருசலேமின் தெரு வீதிகளில் ***அல்லேலூயா*** பாடப்படும்'' (தோப்பியாஸ். 13:21).

அர்ச். அருளப்பர் தமது காட்சியாகமத்தில் ''பரலோகத்திலே திரளான கூட்டத்தாருடைய குரலொலிக்கொப்பான சத்தத்தைக் கேட்டேன். அவர்கள் அல்லேலூயா; இரட்சணியமும், மகிமையும், வல்லமையும் நம்முடைய சர்வேசுரனுக்கே உரியது ''...அல்லேலூயா, ஏனெனில் சர்வ வல்லபமுள்ள நம்முடைய ஆண்டவர் இராச்சிய பாரம் பண்ணுகிறார்...'' (காட்சி. 19:1,6) என்று மோட்சத்தில் முத்திபேறு பெற்ற ஆன்மாக்கள் மகிழ்ச்சி பொங்க சந்தோஷத்துடன் பாடுகிறார்கள் என்று எழுதுகிறார். அவர்களது மொழியே புகழ்ச்சிக் கீதமாகத் திகழ்கின்றது. அவர்கள் நித்தியத்திற்கும் தொடர்ந்து இதனைப் பாடுவார்கள். இதைத் தான் திருச்சபை பூசையில் முன்வாக்கியம் (Antiphone) பாடலில் ''ஆண்டவரே உமது சாகாமையை ஆடையாகக் கொண்ட உமது அர்ச்சியசிஷ்டவர்கள் அல்லேலூயா, அல்லேலூயா, அல்லேலூயா என்று மகிழ்ச்சியோடு கூவுவார்களாக'' என்று பாடுகிறது.

**அல்லேலூயாவின் பொருள்**

**''அல்லேலூயா-hallelu''** என்றால் **''புகழ்வோம்''**, **''யா-iah''** என்பது **''சர்வேசுரனை''** என்று மொழியின் அடிப்படையில் பொருள் கொண்டாலும், அது திருச்சபையின் உதடுகள் வழியாகப் பாடப்படும் போது சக்திவாய்ந்த மகிழ்ச்சிக் கீதமாக எழுச்சியோடு சந்தோஷத்தின் ஆர்ப்பரிப்பாகத் திகழ்கின்றது. திருச்சபையானது, ஜெபக்கூடத்திற்கும் (Synagogue) - மோட்ச ஜெருசலேமிற்கும் இடைப்பட்ட நிலையாக பூமியில் திகழ்வதால், திருச்சபையின் தெய்வீக வழிபாட்டில் அடிக்கடி இசைக்கப்படும் அல்லேலூயா சப்தமானது - பழைய ஏற்பாட்டு வழிபாட்டையும்விட சக்திவாய்ந்ததாக ஒலிக்கிறது. ஒட்டலோகத் திருச்சபையின் முத்துக்களாக இடைவெளியின்றி அல்லேலூயா இசைக்கப்படுகிறது.

இது மீட்பின் வெற்றி வாழ்த்துதலாக இருக்கிறது. ''சந்தோஷத்தின் பாடலும், இரட்சிப்பின் பாடலும் நீதிமான்களுடைய கூடாரங்களிலே கேட்கப்படுகின்றன'' (சங். 117:15). இந்த அல்லேலூயா வாழ்த்து மோட்சத்திலிருந்து நமது எளிய பூமிக்கு வந்தது. திருச்சபையிடம் அது கொடுக்கப்பட்டது. திருச்சபையும் அதனை தமது வழிபாட்டில் குறிப்பாக பெரிய சனி முதல் பெந்தேகோஸ்த் திருநாளுக்குப் பின்வரும் சனிக்கிழமை வரை இந்த அல்லேலூயா கீதத்தை நீளமாகப் பாடுகின்றது. ஏனெனில் இந்த வாரங்கள் பாஸ்கா மகிழ்ச்சியின் காலமாகத் திகழ்கின்றன. ஏனெனில் உயிர்ப்பு திருநாள் வழிபாடுகள் மீட்பின் வெற்றியினுடையவும், ஆண்டவரால் மீட்பின் முனைவாகவும் இருக்கிறது. பாவத்தின் மீதான வெற்றியின் கொண்டாட்டமாகவும் திகழ்கின்றது. இதன் எல்லா வழிபாடுகளும் நித்தியத்தையும், மகிமையில் முத்திபேறு பெற்ற வாழ்வையும் கிறீஸ்து வெற்றியுடன் நுழைந்த - நமக்கு பெற்றுத்தந்த - நித்திய வாழ்வினை குறிப்பதாகவும் இருக்கிறது.

உயிர்ப்பு - கிறீஸ்துவின் விண்ணேற்பு - இஸ்பிரீத்துசாந்துவானவரின் வருகை போன்றவை நமது மகிழ்ச்சியின் மூலமாகத் திகழ்கின்றன. ஆகையால்தான், நமது இவ்வுலக யாத்திரையின் உழைப்பு, போராட்டங்களை மறந்து முழு மகிழ்ச்சியை நன்றியோடு சர்வேசுரனுக்குப் பாடி, மோட்சவாசிகளோடு இடைவிடாமல் மீண்டும் மீண்டும் இணைந்து பாடும் கீதமாக அல்லேலூயா திகழ்கின்றது. இது மகிழ்ச்சிக் கொண்டாட்டத்தின் திருநாள் பாடலாக இருக்கிறது.

உயிர்ப்பு - பாஸ்கு வாரப் பூசையில் படிக்கீதம் நிறுத்தப்படுகிறது. உயிர்ப்பு ஞாயிறுக்குப் பின்வரும் சாதாரண ஞாயிறுக்கு (Low Sunday) முன்பான பாஸ்கு வார சனியன்றுத் தொடங்கி தமத்திரித்துவத் திருநாள் வரையிலும் படிக்கீதம் நிறுத்தப்பட்டு அல்லேலூயா கீதம் இசைக்கப்படுகிறது. இரண்டு முறை அல்லேலூயா பாடி, இடை வாக்கியங்கள் பாடப்பட்டு, பின்னர் ஒருமுறை அல்லேலூயா இசைக்கப்படுகிறது.

இது ஏனெனில் படிக்கீதம் துன்பத்தின் பாடலாக இருப்பதால் அது மகிழ்ச்சியின் உயிர்ப்பு காலங்களில் இசைக்கப்படுவது இல்லை. அல்லேலூயா இருமுறை பாடப்பட்டு, இரட்சண்யம் நமக்கு கிறீஸ்துவின் பாடுகளினால் கிரயத்துக்கு வாங்கப்பட்டுள்ள மகிழ்ச்சி வெளிப்படுத்தப்படுகிறது.

***உதாரணமாக:*** கிறீஸ்துவின் விண்ணேற்பு திருநாள் பூசையில் நிருப - சுவிசேஷ வாசகங்களும் மீட்பர் நித்திய மகிமையில் நுழைவதை விவரிக்கின்றன. அல்லேலூயா கீதம் கிறீஸ்துவின் இந்த மகிமையான விண்ணேகுதலை ஆடம்பரமாக மகிழ்வோடு சுட்டிக்காட்டி இசைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **Alleluja, alleluja;** | ***அல்லேலூயா, அல்லேலூயா.*** |
| **V.** Ps. 46.6. Ascendit Deus in Jubilatione, et Dominus in voce tubae - **Alleluja.** | **V.** (சங்.46.6) சர்வேசுரன் ஆரவாரத்துடன் ஆரோகணமானார். ஆண்டவர் எக்காள ஒலியோடும் எழுந்தருளினார். ***அல்லேலூயா.*** |
| **V.** Ps. 67:18f. Dominus in Sina in Sancto; ascendens in altum, captivam duxit captivitatem **Alleluja.** | **V.** (சங்.67:18-19) ஆண்டவர் பரிசுத்த இடமாகிய சீனாய் மலையில் இருக்கிறார். உன்னதத்திலும் எழுந்தருளி, அடிமைத்தனத்தை அடிமைப்படுத்திச் சென்றார் ***அல்லேலூயா.*** |

(தொடரும்)

# பிரதான மந்திரங்களின் வியாக்கியானம்

## விசுவாச மந்திரம் (தொடர்ச்சி)

| மந்திரம் | கருத்து |
|---|---|
| 6. பரமண்டலங்களிலே ஏறி, சர்வத்துக்கும் வல்ல பிதாவாகிய சர்வேசுரனுடைய வலது பாரிசத்திலே உட்கார்ந்திருக்கிறார். | 6. உயிர்த்த சுவாமி இந்த உலகத்தில் நாற்பது நாள் இருந்தபின், மோட்சத்துக்குத் தமது வல்லமையினால் ஏறி, உண்டாக்கப்பட்ட சகல வஸ்துக்களுக்கும் மேலாக, சர்வ வல்லமையுள்ள பிதா வாகிய சர்வேசுரனால் உயர்த்தப்பட்டு, மனுஷனாகியமட்டும் உன்னத சிம்மாசனத்தில் உட்கார்ந்திருக்கிறார். |
| 7. அவ்விடத்தினின்று சீவியர்களுக்கும் மரித்தவர்களுக்கும் நடுத்தீர்க்க வருவார். | 7. அந்த மோட்ச சிம்மாசனத்திலிருந்து இறங்கி, உலக முடிவில் சாகிறவர்களும், அதற்குமுன் செத்தவர்களுமான யாவரையும் உயிர்ப்பித்து, பாவ புண்ணியங்களுக்குக் கணக்குக் கேட்டுத் தீர்வையிடுவார். |
| 8. இஸ்பிரீத்துசாந்துவை விசுவசிக்கிறேன். | 8. அர்ச். தமதிரித்துவத்தின் மூன்றாம் ஆளாகிய இஸ்பிரீத்துசாந்து உண்டென்றும், அவர் பிதாவுக்கும் சுதனுக்கும் எல்லாவற்றிலும் சரிசமானமாயிருந்து அவர்களோடு ஒரே சர்வேசுரனாயிருக்கிறாரென்றும், பிதாவிடத்திலும் சுதனிடத்திலும் நின்று புறப்படுகிறாரென்றும், மிகுந்த வணக்கத்தோடு ஒத்துக்கொள்ளுகிறேன். |
| 9. பரிசுத்த கத்தோலிக்க திருச்சபையையும், அர்ச்சியசிஷ்டவர்களுடைய சமூதீதப் பிரயோசனத்தையும் விசுவசிக்கிறேன். | 9. சகல ஜாதிஜனங்களும் உட்பட்டு இரட்சணியமடையும்படி எல்லோருக்கும் பொதுவாகவும், எக்காலத்துக்கும் நிலைத்திருக்கவும், ஒரேயொரு சபையாகிய கத். திருச்சபை சேசுக்கிறீஸ்துநாதரால் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. அவர் பேரால் அந்தச் சபை படிப்பிக்கிறதெல்லாம் தேவ வாக்கினின்று பிறந்த சத்தியமென்றும், ஆகையால் விசுவாசத்துக்கும் நல்ல நடத்தைக்கும் அடுத்த போதனையில் அது ஒருக்காலும் தப்பிப்போக மாட்டாதென்றும், முழுமனதோடு ஒத்துக்கொள்ளுகிறேன். |
| 10. பாவப்பொறுத்தலை விசுவசிக்கிறேன். | 10. சகல பாவங்களையும் மன்னிக்க, சேசுநாதர்சுவாமி திருச்சபைக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறார் என்று ஒத்துக்கொள்ளுகிறேன். |
| 11. சரீர உத்தானத்தை விசுவசிக்கிறேன். | 11. மண்ணாய்ப் போகும் மனுஷருடைய சரீரம் தேவ வல்லமையினால் திரும்ப உருவாகி, ஆத்துமத்தோடு சேர்ந்து உயிர்த்தெழுந்திருக்குமென்று ஒத்துக்கொள்ளுகிறேன். |
| 12. நித்திய சீவியத்தை விசுவசிக்கிறேன். | 12. உயிர்த்தவர்கள் மறுபடியும் சாகாமல், நித்தியமாய் மோட்சத்திலாவது நரகத்திலாவது ஜீவிப்பார்களென்று உறுதியாக ஏற்றுக்கொள்ளுகிறேன். |
| ஆமென் சேசு. | இந்த சத்தியங்களையெல்லாம் நான் உறுதியாக விசுவசிக்கி றேன். |

### அர்த்தம்:

***வலது பாரிசம்*** *= வலது பக்கம். (மகா மகிமைப் பிரதாபமுள்ள ஸ்தலத்திலிருக்கிறார்.)*

*(மோட்சத்திலிருந்து இறங்குவார்.)* ***சீவியர்கள், மரித்தவர்கள்*** *என்கிறதற்கு நல்லவர்கள், பாவிகளென்றும் அர்த்தங்கொள்ளலாம். (இஸ்பிரீத்துசாந்து சர்வேசுரனாயிருக்கிராரென்று விசுவசிக்கிறேன்.)*

***பொது*** *= சகல ஜாதி மனுஷருக்காகவும் ஸ்தாபிக்கப்பட்டு, எக்காலத்திலும், எவ்விடத்திலுமுள்ளது. (கத்தோலிக்கென்கிறதற்கும் "பொது" என்கிற அர்த்தந்தான்.)* ***சமூதீத*** *= எல்லோருக்கும் பொதுவான.*

***பிரயோசனம்*** *= ஆதாயம், உரிமை. (ஞான நன்மைகளில் உடன்பங்கு.)*

***உத்தானம்*** *= உயிர்த்தல், உயிரோடு எழுந்திருத்தல்.* ***சததம்*** *= நித்தியம், முடிவு இல்லாதது.*


**வாசகர்களின் கவனத்திற்கு!**

நேயர்களே, நமது சால்வே ரெஜினா பத்திரிக்கையின் வளர்ச்சிக்காக ஜெபியுங்கள். உங்களது மேலான நன்கொடைகளை அனுப்பி உதவுங்கள். நமது பத்திரிக்கையை உங்கள் நண்பர்கள், உறவினர் மற்றும் அயலாருக்கு பரப்புங்கள் - ஆசிரியர், சால்வே ரெஜினா.

# கத்தோலிக்கக் குடும்பத்தின் மேன்மை

**(இக்கட்டுரைத் தொடர் Rev. George A. Kelly எழுதிய "The Catholic Family Hand Book" என்ற புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது.)**

## 1. மகிழ்ச்சியான குடும்பம் (தொடர்ச்சி)

### பெற்றோர்களின் முன்மாதிரிகை

கத்தோலிக்கக் கிறீஸ்தவ குடும்பம் எப்பொழுதுமே, சர்வேசுரன் பெற்றோர், பிள்ளைகள் என்ற முக்கோணமாகத் திகழவேண்டும். நல்ல பெற்றோராக வாழ்ந்து நீங்கள் நூறு ஆண்டுகளுக்குத் தேவையான நல்ல சொத்தை உங்கள் வாரிசுகளுக்கு விட்டுச் செல்வதுபற்றி வலியுறுத்துவது கூடாத காரியம். உதாரணமாக, உங்களுக்கு ஆறு பிள்ளைகள் இருப்பதாகக் கொள்வோம். உங்கள் வாழ்நாட்களுக்குள் 25 அல்லது 30 பேரக்குழந்தைகளை நீங்கள் கொண்டிருப்பீர்கள். அவர்களுடைய குழந்தைகளின் எண்ணிக்கை 100ஐயும் எட்டலாம். இவ்வாறு உங்களுடைய சந்ததியினரின் எண்ணிக்கை 100 வருடங்களுக்குள் ஒருவேளை 1000 ஆக உயர்ந்து, அவர்கள் அனைவரும் உங்களுடைய பண்புகளை ஓரளவுக்குப் பிரதிபலிப்பார்கள். நீங்கள் நல்ல பெற்றோராக இருந்தால், அவர்களும் நல்ல கிறீஸ்தவர்களாகத் திகழ்வார்கள். மோட்சத்தில் உங்களுடைய பரிந்துரையாளர்களாக இருப்பார்கள். ஆனால் நீங்கள் துர்மாதிரிகையாகத் திகழ்ந்தால், ஒரு திரளான தீய மக்கள் கூட்டத்தை உருவாக்கியதே, சர்வேசுரனுக்கும், மனுக்குலத்திற்கும் நீங்கள் அளித்த சொத்தாக இருக்கும்.




1950-ம் ஆண்டு ஐக்கிய அமெரிக்க நாடுகளின் மேற்றிராணிமார்கள் "குழந்தை இரு உலகங்களின் பிரஜை" என்ற அறிக்கையை வெளியிட்டார்கள். அதில், நல்ல கத்தோலிக்கக் குடும்ப வாழ்விற்கான முதல் தேவை, அக்குடும்பத்தின் பிள்ளைகள் சர்வேசுரனைப்பற்றி அறியவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளனர். "சர்வேசுரனைப்பற்றி அறியவேண்டும்" என்பதற்கும், "சர்வேசுரனை அறியவேண்டும்" என்பதற்கும் மிகப்பெரிய வேறுபாடு இருக்கிறது என்றும் அவ்வறிக்கையில் வலியுறுத்தப்படுகின்றது. இந்த வேறுபாட்டை நன்றாக உணரலாம். பெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகளுக்கு சர்வேசுரனைப்பற்றிய உண்மைகளைக் கற்பித்தால் மட்டும் போதாது. இந்த உந்நத சத்தியங்களை குழந்தையினுடைய அம்சமாகவே மாறி, குழந்தையின் தன்மையாகவே ஒன்றிப்போகும் வகையில் கற்பிக்கப்பட வேண்டும். சர்வேசுரனையும் தங்களது தாய் தந்தையைப் போல குடும்பத்தில் ஒருவராக பிள்ளைகள் ஏற்றுக் கொள்ள வேண்டும். கடவுளை வேறுபடுத்தப்பட்ட நிலையில் மட்டும், அதாவது, கற்பனையில் காணக் கூடியவராக மட்டும் பிள்ளைகள் உணரக் கூடாது. அவ்வாறாயின் அவர்கள் சர்வேசுரனை நேசிக்க மாட்டார்கள். அவரை நேசிக்கா விட்டால், அக்குழந்தைக்குக் கற்பிக்கப்பட்ட சர்வேசுரனைப்பற்றிய அறிவினால் எந்த ஒரு பலனையும் விளைவிக்காது. எங்கே உத்தமமான சிநேகம் உள்ளதோ, அங்கேதான் உன்னதமான சேவை இருக்கும்.

"என்னை நீ சிநேகிப்பாயானால், எனது கற்பனைகளை அனுசரி" - இதுவே, நமதாண்டவர் நமக்களித்த உத்தமமான தேவ சிநேக ஜீவியத்திற்கான நிபந்தனை. இதன்படி பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை வளர்க்கவேண்டும். பிள்ளைகள் ஒவ்வொரு அடியாக எடுத்துவைத்து நடந்து செல்லும் உத்தம ஜீவியத்தினுடைய பாதையை தவறின்றி மிகச் சரியாக வழிகாட்டும் தூண்களாக, சர்வேசுரனுடைய கற்பனைகளும், வேத கட்டளைகளும் திகழ்கின்றன என்பதை பிள்ளைகளுக்கு உணர்த்த வேண்டும். இந்த உன்னதமான அலுவலில், அதாவது பரிசுத்த வாழ்விற்கு வழிகாட்டும் தூண்களான தேவ கற்பனைகளை பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்கும் அலுவலில் திருச்சபை, குடும்பம் மற்றும் கல்வி நிறுவனங்கள் என அனைத்தும் பங்கேற்க வேண்டும்.

சர்வேசுரனை அறிவதுபற்றி, உங்கள் குழந்தைகளுக்கு நீங்கள் எவ்வாறு கற்பிக்கக்கூடும்? முதலில் உங்களுடைய நன்மாதிரிகையான செயல்பாடுகள் வழியாக உங்கள் பிள்ளைகள் சர்வேசுரனை சிநேகிக்கவும், ஊழியம் செய்யவும் தூண்டுங்கள். ஏனெனில் உங்களுடைய பிள்ளைகள் தங்கள் வீடுகளில் பார்ப்பதையும், கேட்பதையும் விரைவாக கண்டுபாவிப்பார்கள். நன்மாதிரிகையான செயல்கள் யாதொன்றையும் அவர்கள் உங்கள் வீடுகளில் காணமுடியாத நிலை ஏற்படும்போது, நீங்கள் அவர்களுக்கு கற்றுக்கொடுக்கும் கிறீஸ்தவ நல்லொழுக்கங்களுக்கும், உங்களுடைய அன்றாட செயல்பாடுகளுக்கும் இடையே ஏற்படும் முரண்பாடுகளால் உங்களுடைய பிள்ளைகள் குழப்பமடைவர். அதே சமயம் பள்ளிக்கூடத்தில் (பாரம்பரிய கத். பள்ளிக்கூடங்கள்) வேதபாடங்களைக் கற்றுக்கொள்ளும் போது, அவர்களுடைய

தொடர்ச்சி 20-ம் பக்கம் காண்க . . .

நேயர்களே! நாட்டில், திருச்சபையில் நடப் பவைபற்றிய விபரங்களை அறிய முயல்வது இயல்பு தானே? அதிலும் நாமறியாத, புரியாத நமது மனதைக் குழப்பும் சில கருத்துக்கள் பற்றிய தெளிவு நமது ஞான வாழ்வுக்கு உதவியாக இருக்கும். அதிலும் விசுவாசம், ஒழுக்கம் சம்பந்தமான காரியங்களின் தெளிவு ஆன்மாவைப் பலப்படுத்தும். அதோடு பாரம் பரிய சத்தியங்கள், திருச்சபையின் போதனைகள் மறைக்கப்பட்டு வரும் இந்த நவீன காலத்தில் அவற்றை கேட்டு சந்தேகங்களை தீர்த்துக் கொள்வது மிகமிக அவசியமும் – அவசரமுமாகும்.




நேயர்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதில் வழங்கப்படும். கேள்விகள் அனுப்பும் நேயர்கள் தங்கள் முழு முகவரியினையும் தெரிவிக்க வேண்டும். முகவரி இல்லாத கேள்விகள் தவிர்க்கப்படும். விருப்பத்திற்கேற்ப பெயர் பிரசுரிக்கப்படும் – ஆசிரியர்.

## உறுப்பு தானம் செய்வது சரியா?

***கேள்வி:*** *தற்போது நமது நாட்டில் குறிப்பாக தமிழகத்தில் உறுப்பு தானம் செய்யப்படுவது பற்றிய செய்திகள், அதிலும் மூளைச்சாவு (Brain Death) அடைந்தவர்களது உடல் உறுப்புக்கள் எடுக்கப்பட்டு மற்றவர்களுக்கு பொருத்தப்படும் தகவல்கள் அதிகமாக வந்தவண்ணமிருக்கின்றனவே. சமீபத்தில்கூட சென்னையில் சங். சகோதரி ஒருவர் மூளைச்சாவு அடைந்ததையடுத்து அவரது உடல் உறுப்புக்கள் மற்றவர்களுக்குப் பொருத்தப்பட்டன என்ற செய்தி (The Hindu மார்ச் 9, 2009.) வெளியாகியுள்ளதே? இப்படி உறுப்புதானம் செய்வது சரியா? தவறா? இதுபற்றிய கத். திருச்சபையின் போதனைகள் என்ன?*

***பதில்:*** *சில சமயங்களில் உறுப்புதானம் செய்வது அனுமதிக்கப்படக்கூடியதே. இரண்டு உறுப்புகளில் ஒன்றை தானமாக்கினால் உயிருக்கு எந்தவிதமான பாதிப்பு இல்லையென்றால் இது சாத்தியமே. உதாரணமாக, சிறுநீரக மாற்றுச் சிகிச்சையைக் கூறலாம். ஒரு சிறுநீரகத்தை பிறருக்கு பயன்படுத்துவதால் உயிராபத்து நேரிடாது. அதுபோல ஒரு நபர் இறந்துவிட்டாரென்று நிச்சயித்த பின்னரே மாற்றக்கூடுமான உறுப்புக்களை எடுத்து பிறருக்கு பொருத்துவது. சான்றாக, கண்தானம். இறந்து மிகக் குறுகிய கால அவகாசத்தில் அவரது கண்விழி படலம் (Eye Corneal) அகற்றப்பட்டு வேறொருவருக்குப் பயன்படுத்துவது. இதுவும் ஏற்புடையதே.*

*ஆனால், தாங்கள் கூறிய செய்தியின்படி மூளைச்சாவு அடைந்த நபரின் உறுப்புக்களை எடுத்து மற்றொருவருக்கு பொருத்துவது என்பது தவறு, ஒழுங்கீனமாகும். மூளைச்சாவு நிலையில் கிட்டத்தட்ட நோயாளியின் மூளைதான் பாதிப்படைந்து செயல்படாமல் போயிருக்குமே தவிர, அவர் இறந்து போய்விடவில்லை. உயிர் பிழைப்பது மிகக் கடினம் என்று நிச்சயித்தாலும்கூட அவரது உயிர் இன்னும் உடலிலிருந்து பிரியாத நிலையில்தான் உள்ளார். இப்படிப்பட்ட நிலையில் வேறொரு நபரைக் காப்பாற்றுவதற்காக இவரைக் "கொன்று" அவரது உறுப்புக்களை எடுப்பது (Organ Harvesting - உறுப்பு அறுவடை செய்வது என்ற சொற்றொடர் பயன்படுத்தப்படுகிறது) என்பது அனுமதிக்கக் கூடாதது.*

*ஒரு நபர் உண்மையிலேயே இறந்துவிட்டாலோ அல்லது இதயத்துடிப்பு, மூச்சு மண்டலம் போன்றவை வேலை செய்வதை நிறுத்தி சில நிமிடங்கள் கடந்து விட்டாலோ அவர்களின் உடல் உறுப்புக்கள் பழுதடைந்து உறுப்பு மாற்றம் செய்வதற்கு பயனற்று போய்விடும் என்றெல்லாம் மருத்துவக் காரணங்கள் கூறப்படுகின்றன.*

*அதோடு மூளைச்சாவு என்ற நிலையில் ஒருவன் இறந்துவிட்டானா? உயிரோடிருக்கிறானா? என்று தீர்மானிப்பது பிரச்சினைக்குரியது. மருத்துவ சோதனையான ECG இருதயத்துடிப்பு ஒரே சீராக குறைவது அல்லது மூச்சு நின்றுவிடுதல் என்ற நிலையில்தான் மனிதன் இறந்தவனாகக் கருதப்படுகிறான். இருந்தாலும் செயற்கை சுவாசம், இருதயத்துடிப்பைப் பராமரிக்கும் Monitor போன்ற கருவிகளால் அவனது உயிரைத் தொடரச் செய்ய முடியும். சர்வேசுரனின் மேலான இரக்கத்தினால் அம்மனிதன் உயிர் பிழைக்கவும் முடியுமல்லவா? இப்படி எத்தனையோ புதுமையான சம்பவங்கள் நடந்துள்ளனவே?! அப்படியிருக்க இந்த அபாயகரமான நிலையில் உள்ளவர் மூளைச்சாவு அடைந்துவிட்டார் என்று கூறி அவரது உடல் உறுப்புக்களை அறுவடை செய்வது எப்படி நியாயமாகும்?*

*தாங்கள் குறிப்பிட்டுள்ளதைப் போல தமிழ்நாட்டில் இத்தகைய போக்கு அதிகரித்து வருகிறது. இது ஒரு வியாபாரமாகக்கூட போய்விடும் அபாயம் எழுந்துள்ளது. இத்தகைய போக்கு ஒரு மனிதாபிமானம் இல்லாத செயலாக இருக்கிறது. இது உண்மையிலேயே சர்வேசுரனுக்கு எதிரானதும், பாவகரமானதாகவும், ஒழுங்கீனமானதாகவும் இருக்கிறது. இறப்பு என்பது ஆன்மா உடலை விட்டு வெளியேறுவதைக் குறிக்கிறது. ஆன்மா எப்போது பிரிகிறது என்பதை அதனை சிருஷ்டித்த கடவுள் ஒருவர்தான் அறிவார். மூளைச்சாவு என்பது உண்மையான சாவு ஆகாது. உயிர் இரத்த ஓட்டத்தால் தாங்கப்பட்டுக்கொண்டிருக்கும் அந்த நிலையிலும்கூட அவன் உயிருள்ளவனே தவிர செத்தவன் அல்ல. மூளைச்சாவினால் அவனது மூளைதான் செயலிழந்து விட்டது. அவனால் சிந்திக்க முடியாது. மூளையின் அனைத்து செயல்பாடுகளும் இழந்து ஒரு பயனும் இல்லாத நிலையிலும் அவன் இன்னமும் உயிரோடிருப்பவனே! இந்த நிலையில் அவனது மரணத்தைத் தீர்மானிப்பது மனிதனுடைய செயல் அல்ல. ஆகையால் உடலில் அனைத்து மூச்சு - இதயத் துடிப்புக்களும் முழுமையாக அடங்காத நிலையில் முக்கிய உறுப்புக்கள் அகற்றப்படக் கூடாது. இந்த செயல் கண்டிக்கப்படக் கூடியதே. கத்தோலிக்கர்கள் இதில் கவனமுடன் இருக்கவேண்டும்.*

**18-ம் பக்கம் தொடர்ச்சி** . . . குழப்பம் இன்னும் அதிகரிக்கும். அங்கு அவர்கள் சர்வே சுரனுடைய பரிசுத்த நாமத்தை எவ்வாறு சங்கை செய்வது என்று கற்றுக்கொள்வார்கள். ஆனால், வீடுகளில் பெற்றோர் முன்கோபத்தில் மூர்க்கமாக பேசும்போது, சர்வேசுரனுடைய திருநாமமானது அவசங்கையாக உச்சரிக்கப்படுவதைக் கேட்பர். பள்ளிக்கூடத்தில், அவர்கள் தங்கள் சக மாணவர்களுடன் அனுசரித்துப் பழகக் கற்றுக்கொள்வர். வீடுகளிலோ தங்களுடைய சகோதர சகோதரிகளுடன் எல்லாவற்றிலும் சண்டைபோடுவதற்கும் போட்டி போடுவதற்கும் அனுமதிக்கப்படுவர். பள்ளிக்கூடங்களில் உங்களுடைய பிள்ளைகள் நேர்மை, நீதிக்கான நல்லொழுக்கப் பாடங்களைக் கற்றுக்கொள்வர். ஆனால் அவர்கள் தங்கள் இல்லங்களில் நீதி நேர்மைக்கு விரோதமான போக்குகள், உலகக் காரியங்கள் மதிக்கப்படுவதைக் கேட்பர்

இவ்வாறு தங்களுடைய வீடுகளில் ஒன்றும், பள்ளிக்கூடங்களில் அதற்கு எதிர்மறையானதொன்றுமாக தாங்கள் அனுசரிக்கும், அனுசரிக்கப் போதிக்கப்படும் ஒழுக்க நெறிமுறைகளுக்கு முரண்பாடான நிலைகளால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்களாக, அவற்றால் சலிப்படைந்தவர்களாகி விடுகிறார்கள். விரைவில் ஒன்றில் தங்களுடைய பெற்றோராகிய உங்கள் மேலோ அல்லது தங்கள் ஆசிரியர்கள் மேலோ நம்பிக்கை இழந்து விடுகிறார்கள், அல்லது யாரையுமே சாராமல் இருசாராரையுமே நம்பாமல் போகலாம்.

*(தொடரும்)*

# குருத்துவ பொன்விழா வாழ்த்துக்கள்!

**தங்களுடைய குருத்துவத்தின் 50-வது ஆண்டு நிறைவைக் காணும்**

**சங். மரிய மிக்கேல் மத்தியாஸ் சுவாமிகள்** - 28.03.2009

**சங். மெத்தோடியஸ் N. பர்னாண்டோ சுவாமிகள்** - 06.04.2009

**அவர்களுக்கு சால்வே ரெஜினா பத்திரிகை தன்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்ளுகிறது.**

## Ad multos annos!

## தமிழகத்தில் பாரம்பரிய லத்தீன் திவ்விய பலிபூசை நடைபெறும் இடங்கள்:

**பாளையங்கோட்டை :**
அர்ச். தமத்திரித்துவ ஆலயம்.
தொலைபேசி எண்: 0462 - 2572389, 2586201.

**சிங்கம்பாறை :**
அர்ச். அந்தோணியார் ஆலயம்.
தொலைபேசி எண்: 0462 - 2572389, 2586201..

**கிறீஸ்துராஜபுரம் :**
கிறீஸ்துராஜா ஆலயம்,
தொலைபேசி எண்: 04651 - 294785

**நாகர்கோவில் :**
அர்ச். தோமையார் ஆலயம்.
தொலைபேசி எண்: 0462 - 2572389, 2586201.

**தூத்துக்குடி :**
அர்ச். பிரான்ஸிஸ் சவேரியார் ஆலயம்.
தொலைபேசி எண்: 9942707246.

**ஆசாரிப்பள்ளம் :**
அர்ச். அந்தோணியார் ஆலயம்.
தொலைபேசி எண்: 0462 - 2586201.

**[illegible]**
அர்ச். சூசையப்பர் சிற்றாலயம்
No-14/2, 3-வது மெயின் ரோடு
ஸ்ரீனிவாசா நகர், திருச்சி - 620 017.
தொலைபேசி எண்: 0431 - 2782798.

**சென்னை :**
அர்ச். அந்தோணியார் மெட்ரிக்குலேஷன் பள்ளிவளாகம்.
தொலைபேசி எண்: 044-22355389; 9791134344; 9445122353; 9444685103.
**ஞாயிறு பூசை நேரம் : மாலை 6.00 மணி**

**ஆர். என். கண்டிகை :**
ஜென்ம இராக்கினி ஆலயம்.
தொலைபேசி எண்: 9444122316.

Society of St. Pius X
#1, Marcel Lefebvre Place, Annie Nagar, Seevalaperi Road,
Palayamkottai, Tirunelveli – 627 002.
Ph: 0462-2586201; 2572389. e-mail: sspxindia@gmail.com (or) rajakumar@sspx.net